விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 320 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 18 சனிக்கிழமை (04.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

மலிவு விற்பனை
தீபாவளியை முன்னிட்டு 04.11.2023 முதல் 11.11.2023 வரைஎமதுநிலையத்தில் வாங்கப்படும். அனைத்து புடவை களுக்கும் 5% விற்பனை கழிவு வழங்கப் படும் என்பதனை வாடிக்கையாளர் களுக்கு அறியத் தருகின்றோம். SALE
லைடன் பிடவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C-7551) 021 222 2381

## பலாலி விமான நிலையத்தினூடாக நாடு திரும்பினார் நிர்மலா சீதாராமன்

(யாழ்ப்பாணம்)

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்த இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று யாழ்.விமான நிலையத்தின் ஊடாக இந்தியாவிற்குப் பயணமானார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் புதிய தொழில்நுட்பம் மற்றும் தயாரிப்பு வர்த்தக கண்காட்சியை இந்திய நிதியமைச்சர் பார்வையிட்டார்.

அதன் பின்னர் யாழ்.நூலகம் மற்றும் நல்லூர் ஆலயத்திற்கு விஜயம் செய்த இந்திய நிதியமைச்சர் பின்னர் இந்திய ஸ்டேட் வங்கியின் (SBI) யாழ்ப்பாண கிளையின் திறப்பு விழாவில் கலந்து கொண்டார். (ம-7,33)

## தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க

### இலங்கை மீது இந்தியா அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் – இரா.சம்பந்தன்

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க இலங்கை மீது இந்தியா அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வடக்கு - ▷15

# யாழை வடிவமைக்க ஆட்கள் உண்டா?

### யாழை இசைக்க ஆட்கள் இருக்கின்றார்களா? யாழில் ஆர்வமாக கேள்வியெழுப்பிய நிர்மலா சீதாராமன்



(யாழ்ப்பாணம்)

யாழுக்கு நேற்று விஜயம் செய்த இந்திய நிதி அமைச்சர் யாழ்.பொது நூலகத்தில் வைக்கப்பட்டிருந்த யாழைப் பார்த்து யாழை வடிவமைக்க ஆட்கள் உண்டா. யாழை இசைக்க ஆட்கள் இருக்கின்றார்களா? என ஆர்வமாகக் கேட்டறிந்தார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## கரவெட்டியில் மயங்கி விழுந்தவர் உயிரிழப்பு

(கரணவாய்)

வைத்தியசாலைக்கு துவிச்சக்கரவண்டியில் சென்றவர் மயங்கி விழுந்து மரணம் அடைந்துள்ளார். ▷15

## 75 ரூபாயினால் லிட்ரோ எரிவாயு விலை உயர்வு

(கொழும்பு)

12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 75 ரூபாயினால் அதிகரிக்கப்படவுள்ளது.

குறித்த விலை உயர்வானது, இன்று முதல் அமுலுக்கு வரும் என லிட்ரோ காஸ் நிறுவனத் தலைவர் ▷15

## நிர்மலா சீதாராமன் நல்லூர் விஜயத்தின்போது

### விஸ்வ பிரசன்னா குருக்களுக்கு வாழ்த்து



(யாழ்ப்பாணம்)

இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று நல்லூர் விஜயம் செய்தபோது விஸ்வ பிரசன்னா குருக்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

இந்தியாவின் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று வெள்ளிக் ▷15

## சீனத் தூதுக் குழுவினரின் யாழ்.வருகைக்கு எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

சீனத் தூதுவர் தலைமையிலான குழுவொன்று நாளை மறுதினம் 6ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளமைக்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் தலையீடுகளைக் குறைக்கும் நோக்கில் இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருகின்றது எனக் குற்றம் சாட்டப்படுவதுடன் வடக்கு மீன்பிடித் துறையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருகின்றமை பலத்த கண்டனத்துக்கு உள்ளாகியுள் ▷15

## வடக்கிலுள்ள வைத்தியசாலைகளில் நேற்று பணிப் புறக்கணிப்பு

### யாழ்.போதனா முன் கவனயீர்ப்பு



(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் நேற்றுக் காலை 8 மணி முதல் பணிப்புறக் கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த பணிப்புறக்கணிப்பு இன்று ▷15

## ஐஸ் போதைக்கு அடிமையான 16 வயது மாணவன் மரணம்

### புதுக்குடியிருப்பில் சம்பவம்

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் ஐஸ்போதைப் பொருளுக்கு அடிமையான மாணவனொருவன் விபரீத முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவமானது, நேற்று முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் இடம் பெற்றுள்ளது.

உயிரிழந்த 16 வயதுடைய மாண ▷15

நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த வருடம் கல்விக்காக 465 பில்லியன் ஒதுக்கப்படும்

## உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டில் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்விக்காக 255 பில்லியன் ரூபாவும் உயர்கல்விக்காக 210 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்படும் என எதிர்பார்ப்பதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

ஜனாதிபதி. ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் இதனைத் தெரிவித்தார்.

அடுத்த வருட இறுதிக்குள், அனைத்து பல்கலைக்கழகங்களினதும் உபவேந் தர்களுக்கு மேலதிகமாக, பிரதி உபவேந்தர்கள் நியமிக்கப்பட உள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் இலங்கையின் கற்றல் மற்றும் கற்பித்தல் உள்ளிட்ட இரு துறைகளிலும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ம-7)


# கண்ணீர் அஞ்சலி

கந்தரோடை, சுன்னாகம் முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட எமது சங்கத்தின் அங்கத்தவர்

**அமரர் மாணிக்கம் நாகேஸ்வரன்**

02.11.2023 ஆம் திகதி அகால மரணமடைந்துள்ளார்.

இவரது குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-7553)



மண்ணில் 28.01.1963 விண்ணில் 02.11.2023

பிரிவால் துயருறும்

அங்கத்தவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், பணியாளர்கள்,

சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்


## யாழை...

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்த இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

பலாலி விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணத்திற்கு வந்த இந்திய நிதி அமைச்சரை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ், யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

இந்திய நிதி அமைச்சருடன் இந்திய தூதுவர் கோபால் பாக்லே, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய உட்பட இந்திய உயர்மட்ட குழுவும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளது.

இந்த விஜயத்தின்போது வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்ட அவர் அதனைத் தொடர்ந்து அங்கு கூடியிருந்த மக்களுடன் கலந்துரையாடி புகைப்படங்கள் எடுத்துக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து வாகனத்தை நோக்கி சென்றபோது ஆலய வளாகத்தில் இருக்கின்ற கிணறு மூடப்பட்டிருந்தது இதனைக் கண்ணுற்ற இந்திய நிதியமைச்சர் ஏன் இந்தக் கிணறு மூடப்பட்டுள்ளது இது திறந்திருப்பதே சிறந்தது என ஆலோசனை வழங்கினார்.

இந்த விஜயத்தின்போது யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு வருகை தந்து நூலகத்தினைப் பார்வையிட்டார். இதன்போது, நூலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த யாழ் இசைக் கருவியை பார்வையிட்டதுடன், இக் கருவியை இசைக்க முடியுமா எனவும் இதனை வடிவமைப்பதற்கு ஆட்கள் இருக்கிறார்களா? எனவும் யாழை இசைப்பதற்கு ஆட்கள் இருக்கின்றார்களா? இசைக்கக்கூடியதாக உள்ளதா? என ஆர்வமாக கேள்வி எழுப்பியுள்ளார். இதற்கு யாழ்.மாநகர சபை ஆணையாளர் ஆம், என பதிலளித்ததுடன் அண்மைக் காலத்தில் தான் இத்தகைய யாழை ஒருவர் வடிவமைத்து காண்பித்திருந்தார் என்று கூறினார்.

இந்திய நிதியமைச்சர் யாழ் இசைக் கருவியைப் பற்றி கேட்டறிந்தது பலரையும் வியப்பில் ஆழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)


## Romania வேலைவாய்ப்பு விசா

**Romania** நாட்டில் **Electrician** மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

**Hybrid International hub (pvt) Ltd, Jaffna**

(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்)

(C-7552)

**021 222 1265,076 250 0098**



# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

### நிலப்பரப்பு

- பிரதான இராச பாதையும் G.P.S விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 4 பரப்பாகவும் 3 1/2 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 Km, திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 Km, நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 Km, திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 Km
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**பார்வையிடும் நேரம் :**
**காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை**

தொடர்புகளுக்கு : ஜெயம்

(17658)

**077 814 7389, 077 986 5457**




# தரமான காணி விற்பனைக்கு உண்டு

GOLDEN Real Estate

**யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A9 வீதி முகப்புடன் 69 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு, நன்னீருற்று
- வடமாகாண சபை, சித்த மருத்துவமனை ஆகியவற்றிற்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
- 18 அடி பாதை
- யாழ். பஸ் நிலையத்திலிருந்து 6 km தூரம்
- மிகவும் நல்லசூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
- வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் உகந்த இடம்
- பரம்பரைக்காணி, பல வருடகால தோம்பு, தூய உறுதி
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் காலை 06.00 – மாலை 6.00 மணிவரை
- 1 பரப்பின் விலை 24 லட்சம்




(17659)

**Golden Real Estate (PVT) Ltd**
**Director & Owner : T.Kalaithasan**

**077 468 3354**
**077 288 0152**
**077 623 4204**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி அபகரிப்புகளை நிறுத்தாவிட்டால்

# மக்களை திரட்டி அரசிற்கு பதில் சொல்வோம்

## சிறீதரன் எம்.பி உறுதி



**(மட்டக்களப்பு)— வடக்கு, கிழக்கில் இடம்பெற்றுவரும் காணி அபகரிப்புகளை நிறுத்தாவிட்டால் வெகு விரைவில் பாரிய அளவில் மக்களைத் திரட்டி அரசாங்கத்திற்கு பதில் சொல்வோம் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு கால்நடைப் பண்ணையாளர்களினால் சித்தாண்டி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "மயிலத்தமடு, மாதவனைப் பகுதிகளில் உள்ள பண்ணையாளர்களின் மேய்ச்சல்தரையானது அம்பாறை மற்றும் பொலநறுவை பகுதிகளிலிருந்து வருகை தந்துள்ள சிங்கள விவசாயிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அதே வேளை தமிழர்களுடைய கால்நடைகளும் சுட்டுக் கொல்லப்படுகின்றன.

இதன் காரணமாக மட்டக்களப்பை சேர்ந்த கால்நடை வளர்ப்பாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அடிப்படையான அவர்களின் நிலத்தினை பறித்தல் என்பது அவர்களை வாழவிடாமல் அகற்றுவதற்கான முயற்சியாகும். அம்பாறையில் தமிழ் மக்களின் இருப்புகளையும் பிரதிநிதித்துவத்தையும் இழந்துவரும் நேரத்தில் திருகோணமலையிலும் அதேநிலைமையினை எதிர்கொண்டுள்ள காலச்சூழலில் தொடர்ந்தும் நாங்கள் பாதிக்கப்படுகின்றோம். வஞ்சிக்கப்படுகின்றோம்.

அதற்கு எதிராகவே மக்கள் போராட்டத்தினை முன்னெடுத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு ஆதரவு வழங்குவது என்பது எங்களது கடமையாகும். இது தொடர்பில் சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


ஜனாதிபதி அப்பகுதியில் உள்ள சட்டவிரோத குடியேற்றகாரர்களை அகற்றுமாறு கூறிய பின்னரும் அப்பகுதியில் புத்தர் சிலையினை வைத்தார்கள். சட்டவிரோதமாக அம்பிட்டிய தலைமையிலான அராஜக குழு தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

அதுமட்டுமல்லாது வாய் பேசாத மாடுகள் வெடி வைத்து கொல்லப்படுகின்றன. பௌத்தர்கள் மாடுகளைக் கொலை செய்து வருவது அவர்களின் மதக் கொள்கைக்கு எவ்வாறு சரியானது என கேட்கத் தோன்றுகின்றது.


எனவே இதுதொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் விரைவில் நாங்கள், வடக்கும் மற்றும் கிழக்கில் மாபெரும் மக்கள் அலையினை உருவாக்கி அரசாங்கத்திற்கு ஒரு பதிலைக் கூறுவோம்" இவ்வாறு சிறீதரன் எம்.பி தெரிவித்துள்ளார். (நி-5-6)


# இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்

# யாழ்.விஜயத்தின் போது...









(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் நிதி மற்றும் கார்ப்பரேட் விவகாரங்களுக்கான அமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டார். யாழ்ப்பாணம் பலாலியில் உள்ள விமானப் படையினரின் விமானத்தளத்தின் ஊடாக யாழ்ப்பாணத்திற்கு வந்த அமைச்சரை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் உள்ளிட்டோர் நேரில் சென்று வரவேற்றனர். அதன்போது, இந்திய அமைச்சருடன் இந்தியத் தூதுவர் கோபால்.பாக்லே, இலங்கை.வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய உள்ளிட்ட இந்திய உயர்மட்ட குழுவும் வருகை தந்து குறித்த குழுவினர் யாழ்ப்பாணம் கலாசார மையத்தை பார்வையிட்டதுடன் நல்லூர் கந்த சுவாமி கோயில் மற்றும் யாழ்.பொதுநூலகம் ஆகியவற்றிற்கும் சென்றனர். அதேவேளை யாழ்ப்பாணத்தில் பாரத ஸ்டேட் வங்கியின் கிளையையும் திறந்து வைத்தார். (நி-5-6-33-104)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# நெதர்லாந்தை வென்றது ஆப்கானிஸ்தான்





உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் நெதர்லாந்தை வீழ்த்தி ஆப்கானிஸ்தான் 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

2023ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் 34ஆவது போட்டி நேற்று இடம்பெற்றது.

லக்னோவில் இடம்பெற்ற குறித்த போட்டியில் ஆப்கானிஸ்தான் மற்றும் நெதர்லாந்து ஆகிய அணிகள் மோதின.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நெதர்லாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதற்கமைய, முதலில் துடுப்பெடுத்தாடிய அந்த அணி 46.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 179 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

அணிசார்பில் அதிகபடியாக சைப்ரண்ட் ஏங்கல்பிரெக்ட் 58 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில், ஆப்கானிஸ்தான் அணியின் மொஹம் மட் நபி 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இந்தநிலையில், 80 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 31.3 ஓவர்களில் 03 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அணிசார்பில் அதிகபடியாக ஹஷ் மத்துல்லா ஷாஹிதி 56 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில், நெதர்லாந்து அணியின் சாகிப் சுல்பிகர் 25 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை கைப்பற்றினார். (ம-7)




## முகமது சமிக்கு வாழ்த்து தெரிவித்த ஆப்கான் ரசிகை வைரலாகும் டுவிட்



உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினம் இலங்கை - இந்தியா அணிகள் மோதின. இதில் இந்திய அணி 302 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முதல் அணியாக தகுதி பெற்றது.

இந்த போட்டியில் 18 ரன் மட்டுமே விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை கைப்பற்றிய முகமது சமி ஆட்ட நாயகன் விருதை தட்டிச் சென்றார். இதன் மூலம் பல சாதனைகளுக்கு சொந்தக்காரர் ஆனார்.

உலகக் கோப்பையில் அதிக விக்கெட் கைப்பற்றிய இந்தியர்களின் பட்டியலில் முதலிடத்தில் இருந்த ஜாகீர்கான் (23 ஆட்டத்தில் 44 விக்கெட்), ஸ்ரீநாத் (34 ஆட்டத்தில் 44 விக்கெட்) ஆகியோரை பின்னுக்கு தள்ளினார். இந்த வரிசையில் 4-வது இடத்தில் பும்ரா (33 விக்கெட்) உள்ளார்.

உலகக் கோப்பையில் முகமது சமி ஒரு இன்னிங்சில் 5 விக்கெட் மற்றும் அதற்கு மேல் சாய்ப்பது இது 3-வது முறையாகும். உலகக் கோப்பையில் அதிக தடவை 5 விக்கெட் வீழத்திய ஆஸ்திரேலியாவின் மிட்செல் ஸ்டார்க்கின் சாதனையை (இவரும் 3 முறை) சமன் செய்தார்.

ஒட்டுமொத்த ஒருநாள் போட்டிகளில் முகமது ஷமி 5 விக்கெட் எடுப்பது இது 4-வது நிகழ்வாகும். இந்தியர்களில் அதிக முறை 5 விக்கெட் வீழ்த்தியவர் இவர் தான். ஸ்ரீநாத், ஹர்பஜன் சிங் (தலா 3 முறை) அடுத்த இடத்தில் உள்ளனர்.

பல்வேறு சாதனைகளை படைத்த முகமது சமிக்கு ஆப்கானிஸ்தான் ரசிகை சமூக வலைதளத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார். அதில் மைதானம் அவருக்கு சொந்தமானது. என்ன ஒரு அற்புதமான வீரர் என் பதிவிட்டுள்ளார். இந்த பதிவு சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. (ம-7)

### உலகக் கிண்ண கிரிக்கெட் - 2023 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 7 | 7 | 0 | 14 |
| 2 | தென்னாபிரிக்கா | 7 | 6 | 1 | 12 |
| 3 | அவுஸ்திரேலியா | 6 | 4 | 2 | 8 |
| 4 | நியூசிலாந்து | 7 | 4 | 3 | 8 |
| 5 | ஆப்கானிஸ்தான் | 7 | 4 | 3 | 8 |
| 6 | பாகிஸ்தான் | 7 | 3 | 4 | 6 |
| 7 | இலங்கை | 7 | 2 | 5 | 4 |
| 8 | நெதர்லாந்து | 7 | 2 | 5 | 4 |
| 9 | பங்களாதேஷ் | 7 | 1 | 6 | 2 |
| 10 | இங்கிலாந்து | 6 | 1 | 5 | 2 |




இடம் : நரேந்திர மோடி அரங்கு, அஹமதாபாத். | நேரம் : பி.ப 2.00 மணி




இடம் : எம்.சின்னசாமி அரங்கு, பெங்களூரு. | நேரம் : மு.ப 10.30 மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலீட்டாளர்கள் விரும்பாத இடமாக மாறும் இலங்கை

## இராஜாங்க அமைச்சர் திலும்

(கொழும்பு)

அதிகரித்த மின்கட்டணங்கள் வரிகள் முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான செலவுகள் மிகவும் அதிகரித்து செல்வதால் இலங்கை, முதலீட்டாளர்கள் விரும்பாத இடமாக மாறிவருகின்றது என தெரிவித்துள்ள அமைச்சர் இதன் காரணமாக இலங்கையில் முதலீடு செய்யுமாறு முதலீட்டாளர்களை கேட்டுக்கொள்வது புதிய சவாலாக மாறி வருகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

அதிகரித்துவரும் மின்கட்டணமே முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்யுமாறு கேட்டுக்கொள்வதில் கடுமையான சவாலாக உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானம் வர்த்தக சமூகத்தின் அனைத்து தரப்பினருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வர்த்தக நடவடிக்கைகளிற்கான செலவுகள் அதிகரிப்பதால் உள்ளூர் உற்பத்திகளால் வெளிநாட்டு சந்தையில் போட்டிபோட முடியாத நிலை காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மின்கட்டண அதிகரிப்பு குறித்து உங்கள் நிலைப்பாட்டையையே நானும் கொண்டுள்ளேன். இது எங்கள் ஏற்றுமதிகளை பாதிக்கின்றது. நாளாந்தம் அதிகரிக்கும் செலவுகள் முதலீட்டாளர்களை கொண்டு வரும் எங்கள் முயற்சிகளை சவால்மிகுந்தவையாக மாற்றுகின்றன. ஏற்கனவே இங்கு முதலீடு செய்தவர்களை தக்க வைப்பதும் சவால் மிகுந்ததாக காணப்படுகின்றது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# மன்னாரில் இருந்து கொழும்பு சென்ற பேருந்து விபத்து

## பலர் படுகாயம்



(கொழும்பு)

மன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் பலர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சொகுசு பேருந்து வேகமாக மன்னார் நோக்கி பயணிகளுடன் சென்று கொண்டிருந்த போது புத்தளத்தில் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை. பலர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

படுகாயம் அடைந்தவர்களில் பலர் ஆபத்தான நிலையில் உள்ளமையினால் உயிரிழப்புகள் ஏற்படும் அபாயம் உள்ளதாக அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6)

### உள்ளூராட்சி நிறுவனங்களின்

# 8,400 பணியாளர்கள் நிரந்தர அரச சேவையில்

## இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர

(கொழும்பு)

மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் விசேட திட்டத்தின் ஊடாக அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய, சுகாதார மற்றும் கல்வித்துறைகளுக்கு 9 பில்லியன் ரூபாய் வழங்கப்படவுள்ளதாக மாகாண சபைகள், உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தவுடன் மாகாண சபைகளுக்குட்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களில் நிரந்தரமற்ற 8 ஆயிரத்து 400 பணியாளர்கள் நிரந்தர அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு, அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

கடந்த 36 ஆண்டுகளில் செய்யத் தவறிய பணிகளை ஒன்றரை ஆண்டுகளில் முன்னெடுத்து வருகின்றோம்.

வடமத்திய மற்றும் வட மாகாணங்களில் தற்போது வீதிகளை அடையாளம் கண்டு, பட்டியலிடும் பணி நிறைவடைந்துள்ளன.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் இரண்டு மாகாணங்களிலும் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன.

எஞ்சிய 6 மாகாணங்களுக்கான காலவரையறையை தயாரித்து பயிற்சிகளை வழங்கி 2024 ஆம் ஆண்டில் இலக்கை அடைய எதிர்பார்க்கப்படுகிறது.

எமது அமைச்சின் கீழ் உலக வங்கியின் ஆதரவின் கீழ் செயற்படுத்தப்பட்ட செயற்றிட்டத்தின் மூலம் ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கிய சுகாதார மற்றும் கல்வித் துறைக்கு ஒன்பது பில்லியன் ரூபாவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம் என மாகாண சபைகள், உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# கலைப்பிரிவில் இணைக்கவுள்ள புதிய பாடங்கள்-உயர்கல்வி அமைச்சு

(கொழும்பு)

இந்நாட்டின் தொழிற்சந்தைக்கு ஏற்றவாறு பல்கலைக் கழகங்களில் கலைப்பட்டப் படிப்புகளில் உள்ள பல பாடங்களை உயர்கல்வி அமைச்சின் கூற்றுப்படி மேம்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கலைப்பிரிவுகளில் தற்போது 314 பட்டப்படிப்புகள் இயங்கி வருவதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

அதன்படி, வேலைவாய்ப்பு சந்தைக்கு ஏற்றவாறு படிப்புகள் புதுப்பிக்கப்பட்டு அடுத்த ஆண்டு இறுதிக்குள் செய்யப்படும் என்றும் உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# இராசிபலன்

04.11.2023
ஐப்பசி 18, சனிக்கிழமை
சப்தமி பின்னிரவு 3.14 மணிவரை

புனர்பூசம் முற்பகல் 10.50 மணிவரை
சுபநேரம் 3.04-4.34 மணிவரை
இராகுகாலம் 9.04-10.34 மணிவரை

சந்திராஷ்டமம் - கேட்டை, மூலம்.

வளவன்

**மேஷம்** கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பெற்றோர் ஆதரவால் பெருமைகள் கூடும் நாள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**கடகம்** எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்** தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவும் நாள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்** நினைத்த காரியங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், கௌரவமான நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் உண்டு.

**ரிஷபம்** உடல்நலனில் கொஞ்சம் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், கௌரவம், அந்தஸ்து உயரும் நாள், நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள்.

**சிம்மம்** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தேகநலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**விருச்சிகம்** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**கும்பம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், மறைமுகப் போட்டிகள் மாறும், உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**மிதுனம்** வாழ்க்கைதரம் உயர வழிவகை செய்வீர்கள், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், வழிபாடு காரிய வெற்றி தரும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி** எதிர்பார்த்த சலுகைகள் வந்து சேரலாம், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர் வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம்.

**தனுசு** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம்.

**மீனம்** பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், போசன சுகமுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.

வாழ்க்கையின் சரியான திக்கில் பயணம் செய்பவன் தோல்வி அடைவதில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய நிதியமைச்சரின் வருகை இரு நாட்டினதும் நெருக்கத்தை வலுவாக்கும்

## வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)
இந்திய நிதியமைச்சரின் வருகை இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான நெருக்கத்தை மேலும் வளர்க்க உதவும் என வடமாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அன்றிலிருந்து இன்று வரை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நெருங்கிய உறவு இருந்ததையும் நாட்டின் தேவைக்காக அவர்கள் ஒருவரையொருவர் பல்வேறு வழிகளில் ஆதரித்ததையும் மரியாதையுடன் நினைவுகூர வேண்டும்.

இந்திய நிதியமைச்சரின் வருகை இருநாட்டிற்கும் இடையிலான நெருக்கத்தை மேலும் வளர்க்க உதவும்.

மேலும் வடக்கிலும் இந்த நாட்டிலும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக வீடமைப்புத் திட்டங்கள் உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்திய அரசாங்கம் வழங்கிய பங்களிப்புக்காகவும் குறிப்பாக நாட்டுக்கு சர்வதேச நிதி உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கு இந்திய அரசாங்கம் பூரண ஆதரவை வழங்கியதற்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என ஆளுநர் தெரிவித்தார். (நி-5-6)

# பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நபரொருவர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள்வெட்டு உள்ளிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த நபர் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை, யாழ்.சர்வதேச விமான நிலையத்தில் வைத்து மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அச்சுவேலி பகுதியை சேர்ந்த 27 வயதுடைய நபர் ஒருவர் வாள்வெட்டு, கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றத்தில் பொலிஸார் கடந்த சில மாதங்களாக தேடி வந்த நிலையில், சென்னையில் இருந்து விமானம் மூலம், யாழ்ப்பாணம் வந்தடைந்துள்ளார் எனும் இரகசிய தகவலை அடுத்து விமான நிலையத்திற்கு விரைந்த மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு உதவி பொலிஸ் பரிசோதகர் மேனேன் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (நி-5-6-33)

# மருத்துவமனையில் சுத்திகரிப்பு தொழிலாளர்கள் இன்மையால் சிரமம்

(சாவகச்சேரி)
மருத்துவமனையில் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் இன்மையால் சுகாதார உதவியாளர்களாகிய நாம் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் சுகாதார உதவியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுக்கப்பட்ட அடையாள போராட்டத்தின் போதே அவர்கள் ஊடகங்களுக்கு மேற்படி கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் வாழ்வாதார பிரச்சினை, வாழ்க்கைச்செலவு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை சுட்டிக்காட்டி அடையாள வேலைநிறுத்த போராட்டத்தில் சுகாதார உதவியாளர்கள் ஈடுபட்டு வருகிறோம்.

மருத்துவமனையில் துப்புரவு பணிகளையும் சுகாதார உதவியாளர்களே செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

இதனால் எமது கடமையை சரிவர செய்ய முடியாத நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டியிருந்தனர். (நி-5-6-30)

# ரி.பி ஹன்ற் ஞாபகார்த்த ஓவியகூட பரிசளிப்பு விழா

(சாவகச்சேரி)
சாவகச்சேரி ரி.பி ஹன்ற் ஞாபகார்த்த ஓவியகூடத்தின் பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஓவியகூட வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

ரி.பி ஹன்ற் ஞாபகார்த்த ஓவியகூடத்தின் ஸ்தாபகர் திருமதி. யோகமணி அழகரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்குமார், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், கௌரவ விருந்தினர்களாக சிவபூமி நிலையத் தலைவர் ஆறு. திருமுருகன், அமெரிக்கன் சிலோன் தேவாலயத் தலைவர் தேவகுணானந்தன் அடிகளார், யாழ். மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் செனரத், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களான மனோகர், பிரசாந், வடமராட்சி வலயக் கல்வி அலுவலக அழகியல் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆரியதாஸ் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-30)

# மோ.சைக்கிள் திருடிய நபரொருவர் கைது

## உதிரிப்பாகங்கள் மீட்பு



(யாழ்ப்பாணம்)
யாழ்.நகரில் வீதியில் தரித்து நின்ற மோட்டார் சைக்கிளைத் திருடிய நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.


யாழ்.செல்வா திரையரங்கு முன்பகுதியில் கடந்த 29 ஆம் திகதி நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில், யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய குற்ற விசாரணை பிரிவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில் விசாரணைகளை முன்னெடுத்த குற்ற விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி கேவா வசந் தலைமையிலான குழுவினர் கிளிநொச்சி பூநகரியைச் சேர்ந்த 32 வயதுடைய சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

மேலும் அவரிடமிருந்து திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் வெவ்வேறாக்கப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்டது என பொலிஸார் தெரிவித்தனர். (நி-5-6-33)

# பிரச்சினைக்கான தீர்வினை ரணிலால் பெற்றுத்தர முடியும்

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை




(யாழ்ப்பாணம்)
நாடு எதிர்கொள்ளுகின்ற அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் தீர்வினைக் காண முடியும்.

மேலும் தேர்தல்கள் நடைபெறுகின்றபோது, மக்கள் தங்களின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவார்களாயின், தொடர்ந்து வருகின்ற ஐந்து வருடங்களில் நாடு சுபீட்சமான நிலையை அடையும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

சண்டிலிப்பாயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் நடைபெற்ற அழிவு யுத்தம் காரணமாக தேவையற்ற பொருளாதார செலவுகள் மற்றும் யுத்தத்துக்காக வெளிநாடுகளில் பெற்ற கடன்களும் அதைவிட ஏனைய தேவைகளுக்காக பெறப்பட்ட கடன்களும் சரியான ஒரு பொறிமுறையை நோக்கி கையாளத் தவறியமையால் நாட்டை முன்கொண்டு செல்ல முடியாத நிலைக்கு தள்ளப்பட்டது.

இவ்வாறான நெருக்கடி நிறைந்த காலகட்டத்தில் நாட்டை பொறுப்பெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை சரியான பாதையில் கொண்டு சென்று நிலைமைகளை சீர் செய்து வருகின்றார். அதில் வெற்றியும் கிடைத்துள்ளது என தெரிவித்தார். (நி-5-6-33)



தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட மட்டுவில் குடும்ப முன்பள்ளிகளின் சிறுவர் தின மற்றும் ஆசிரியர் தின நிகழ்வுகள் அண்மையில் மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் இடம்பெற்றிருந்தன.

(படம்:-சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் சீர்திருத்த ஆணையத்திற்கு புதிய உறுப்பினர் நியமனம்


(கொழும்பு)

இலங்கையின் தேர்தல் முறைமையில் திருத்தங்களை முன்மொழிவதற்காக நியமிக்கப்பட்ட 9 பேர் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அரசாங்கம் மற்றுமொரு உறுப்பினரை நியமித்துள்ளது.

வர்த்தமானியின் பிரகாரம், ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் புதிய உறுப்பினராக அலன் கார் மைக்கல் வெரே டேவிட் எஸ்கு வேர் நியமிக்கப்பட்டுள்ளார். (நி-5-6)

# வற்வரி அதிகரிப்பை அனுமதிக்க முடியாது

## சபாநாயகர் கடும் எதிர்ப்பு



(கொழும்பு)


பெறுமதி சேர் வரி (வற்) அதிகரிக்கப்படுவதனை அனுமதிக்க முடியாது என சபாநாயகர் மகிந்த யாபா அபேவர்தன தெரிவித்துள்ளார். ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

எரிபொருட்களின் விலைகள் சிறியளவில் அதிகரிப்பதனை மக்களினால் தாங்கிக் கொள்ள முடியும் என்ற போதிலும் பெறுமதி சேர் வரியை அதிகரிக்கும் தீர்மானத்தை ஏற்க முடியாது.

பெறுமதி சேர் வரியை 18 வீதமாக அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும், இந்த தீர்மானத்தில் மாற்றம் ஏற்படலாம் எனவும் வரி அதிகரிப்பு தொகையில் மாற்றம் ஏற்படலாம் எனவும் மகிந்த யாபா அபேவர்தன தெரிவித்துள்ளார். (நி-5-6)

# பொலிஸ் மா அதிபராக மீண்டும் விக்ரமரத்ன



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவிற்கு மேலும் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபரின் மூன்று வார கால சேவை நீடிப்பு நேற்று முன்தினத்துடன் முடிவடைந்த நிலையில் இவ்வாறு சேவை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த சேவை நீடிப்பானது நான்காவது முறையாக வழங்கப்படுவதோடு இதற்கு முன்னர் சி.டி.விக்ரமரத்னவுக்கு இரண்டு முறை சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)


## NSB பகிரங்க ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் 30/9/2022 இற்கு முன்பு அடகுவைக்கப்பட்டு, கீழ்குறிப்பிடப்படும் திகதிவரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர்வரும் 18.11.2023 தொடக்கம் 26.11.2023 வரையான காலப்பகுதியில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

| | கிளை | அடகு மீட்கப்பட வேண்டிய முடிவு திகதி | பகிரங்க ஏலம் நடைபெற உள்ள திகதி | ஏலம் நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01. | கொடிகாமம் சாவகச்சேரி கிளிநொச்சி | 16.11.2023 | 18.11.2023 | தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமம் |
| 02. | முல்லைத்தீவு, மல்லாவி | 16.11.2023 | 18.11.2023 | தேசிய சேமிப்பு வங்கி முல்லைத்தீவு |
| 03. | சுன்னாகம். காரைநகர் சங்கானை. மானிப்பாய். | 16.11.2023 | 19.11.2023 | தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் |
| 04. | வவுனியா | 16.11.2023 | 19.11.2023 | தேசிய சேமிப்பு வங்கி வவுனியா |
| 05. | நெல்லியடி, அச்சுவேலி, பருத்தித்துறை | 23.11.2023 | 25.11.2023 | தேசிய சேமிப்பு வங்கி நெல்லியடி |
| 06. | மன்னார், வங்காலை | 23.11.2023 | 25.11.2023 | தேசிய சேமிப்பு வங்கி மன்னார் |
| 07. | யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் 11ம் கிளை. ஊர்காவற்றுறை. திருநெல்வேலி. கோப்பாய் | 23.11.2023 | 26.11.2023 | தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் |

ஏலத்தை ஒத்தி வைக்கும் அல்லது இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

வட பிராந்திய முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி (17655)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



04.11.2023 இன்று
இலங்கை அதிபர்
சேவை தரம் III இல் நியமனம் பெறும்
எமது பாடசாலை ஆசிரியரான
திரு.கந்தசாமி
கைலநாதன்
Pri(Trd) BA,PGDE
அவர்களை
பாராட்டி வாழ்த்துவதோடு
மேலும் பல பதவி உயர்வுகள்
பெற வாழ்த்தி நிற்கும்
Best Wishes
(17646)
ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ஆனைக்கோட்டை அ.மி.த.க.பா.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி.காயத்திரி
அஜந்தன்
(National Diploma in Teaching, B.Ed)
இன்றையதினம் இலங்கை அதிபர்
சேவை நியமனம் பெறும்
எமது பாடசாலையின் ஆசிரியர்
திருமதி.காயத்திரி அஜந்தன்
அவர்களைப் பாராட்டி
வாழ்த்துவதோடு அவரது
அதிபர் சேவைப் பணி சிறக்க
இறையருளை வேண்டுகின்றோம்.
(17638)
கிளி/உமையாள்புரம்
அ.த.க. பாடசாலை
அதிபர், ஆசிரியர்கள்.
Best Wishes


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இஸ்ரேல் என்ற நாடு அ
## தாக்குதல் தொடரும்

(காசா)

### இஸ்ரேல் என்ற நாடு அழிக்கப்படும்வரை ஒக்
### போன்ற தாக்குதல்கள் தொடரும் என ஹமாஸ்



லெபனான் செய்தி நிறுவனமான எல்பிசிஐயிடம் ஹமாஸ் அமைப்பின் முக்கிய அதிகாரியான காசி ஹமாட் அளித்த நேர்காணலில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் நிலத்தில் இஸ்ரேலுக்கு இடமில்லை. எனவே நாங்கள் அந்த நாட்டை அகற்ற வேண்டும்.

இஸ்ரேல் அழிக்கப்படும் வரை

## இணைய வரைபடத்திலிருந்து இஸ்ரேலை நீக்கிய சீனா




(பீஜிங்)

சீனாவின் முன்னணி நிறுவனமான பைடு மற்றும் அலிபாபா தங்களின் இணைய வரைபடத்தில் இருந்து இஸ்ரேல் பெயரை சீனா நீக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே சமீப நாட்களாக மோதல் போக்கு நிலவி வருகிறது.

இந்த நிலையில், சீனாவின் பிரபல்யமான தொழில்நுட்ப நிறுவனங்களான அலிபாபா மற்றும் பைடு தங்களின் இணைய வரைபடத்தில் இருந்து இஸ்ரேலின் பெயரை நீக்கியுள்ளன.

பாலஸ்தீனத்திற்கு ஆதரவான சீனாவின் நிலைப்பாட்டை ஆதரிக்கும் வகையில் சீன நிறுவனங்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பைடுவின் சீன மொழியில் உள்ள இணைய வரைபடத்தில் சர்வதேச நிர்ணயிக்கப்பட்ட அளவீடுகளின்படி இஸ்ரேலின் எல்லைகள் குறிக்கப்பட்டிருந்தாலும் அந்தப் பகுதியில் இஸ்ரேல் என்கிற பெயர் குறிப்பிடப்படவில்லை.

இந்த நடவடிக்கை தொடர்பில் இதுவரையில் அலிபாபா மற்றும் பைடு நிறுவனங்கள் எந்த பதிலும் வெளியிடவில்லை.

இஸ்ரேல் - ஹமாஸ் போரில் யாருக்கும் ஆதரவு தெரிவிக்காத சீனா, பாலஸ்தீனத்துக்கு தனி நாடு அளிப்பதே தீர்வு எனக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## தீவிரமடையும் ரஷ்யா - உக்ரைன் போர் வடகொரிய ஆயுதங்களுடன் களத்தில் ரஷ்யா

(பியாங்யாங்)

உக்ரைனுக்கு எதிரான போரில் பயன்படுத்துவதற்காக வடகொரியா 10 இற்கும் மேற்பட்ட ஆயுதங்களை ரஷ்யாவிற்கு அனுப்பியுள்ளது.

இதில் 1 மில்லியனுக்கும் அதிகமான பீரங்கி குண்டுகள் அடங்கும் என்று தென்கொரியாவின் தேசிய புலனாய்வு சேவை தெரிவித்துள்ளது.

வடகொரியா ஒரு உளவு செயற்கைக்கோளை ஏவுவதற்கான இறுதிக் கட்டத்தில் உள்ளது. மற்றும் அதன் மூன்றாவது முயற்சி வெற்றியடைவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று தென்கொரியாவின் உளவுத்துறை நிறுவனம் அண்மையில் ஒரு மாநாட்டில் தெரிவித்துள்ளது. (நி-5-6)

## இஸ்ரேலுக்கு பதிலடி கொடுத்த ஹமாஸ் ஒரே நேரத்தில் 12 ஏவுகணை தாக்குதல்

(காசா)

இஸ்ரேலுக்கு தொடர்ச்சியாக பதிலடி கொடுத்து வரும் ஹமாஸ் அமைப்பினர் லெபனானில் இருந்து இஸ்ரேல் நாட்டின் வடக்கு பகுதியில்அமைந்துள்ள கிரியாத் ஷ்மோனா நகரின் மீது சரமாரி ஏவுகணை தாக்குதலை மேற்கொண்டதாக ஹமாஸ் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

அதாவது ஒரேநேரத்தில் சுமார் 12 ஏவுகணைகளை ஹமாஸ் அமைப்பினர் ஏவியுள்ள நிலையில் இந்த தாக்குதலில் இஸ்ரேலை சேர்ந்த இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

இதனிடையே தெற்கு லெபனான் மீது இஸ்ரேலின் ஆளில்லா விமானம் கடந்த புதன்கிழமை மேற்கொள்ளவிருந்தது. தாக்குதலை முறியடித்துள்ளதாக லெபனானில் உள்ள ஹிஸ்புல்ல அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் ஹிஸ்புல்லாவின் தாக்குதலை அடுத்து இஸ்ரேல் நாட்டு அதிகாரிகள் மிகவும் அச்சமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே காசாவில் இருந்து மீண்டும் தெற்கு இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு பகுதியான அஸ்டொட் பகுதி மீது கடுமையான ரொக்கட் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனால் தெற்கு இஸ்ரேலில் உள்ள பகுதிகள் எங்கும் அபாய ஒலி எழுப்பப்படுவதாக கூறப்படுகின்றது.

குறிப்பாக இஸ்ரேல் காசா மீது மும்முனை தாக்குதலை முன்னெடுத்து தரைவழியாக முன்னேறி வருவதாக கூறப்படும் நிலையில் இஸ்ரேல் மீது இந்த ஏவுகணை



தாக்குதலை சுரங்கப்பகுதிகளில் இருந்து ஹமாஸ் முன்னெடுப்பதாக கூறப்படுகின்றது.

அதில் ஜெருசலேம் படைப்பிரிவின் தளபதியும் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் காசாவில் இறந்தவர்களில் ஏறக்குறைய 70 வீதம் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்றும் இதுவரை பல்லாயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர் என்றும் யுனிசெப் நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி-5-6)

## கார் -
## குழந்



(டில்லி)

இந்தியாவின் பஞ்சா
மாநிலத்தின் சங்கூர்
மெஹ்லான் சௌ
அருகே இடம்பெற்
விபத்தில் குழந்
உட்பட 6 பேர் உயி
ழந்துள்ளதாக இந்திய உ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...அழிக்கப்படும் வரை
# ...ம் - ஹமாஸ் சூளுரை

**ஒக்டோபர் 7 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல்கள் ...மாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.**

ன
ஸ்
ரி
த
று
பர்

ரே
வ
ற
ரை

ஒக்டோபர் 7 தாக்குதலை மீண்டும் மீண்டும் செய்வோம். நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள், நாங்கள் செய்யும் அனைத்தும் நியாய மானது என தெரிவித்தார்.

இந்நிலையில் காசாவை சூழ்ந்த இஸ்ரேல் இராணுவ வீரர்களை பைகளில் திருப்பி அனுப்புவோம் என ஹமாஸ் அமைப்பின் இராணுவப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஙி-5-6)



## காசாவில்
## ஐ.நா பாடசாலைக்கு அரு... தாக்குதல் நடத்திய இஸ்...
### 27 பேர் பலி



(காசா)

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே போர் சமீப நாட்களாக தீவிரம் அடைந்துள்ளது.

ஜபாலியா அகதிகள் முகாமில் உள்ள ஐ.நா பாடசாலைக்கு அருகே இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் குறைந்தது 27 பேர் உயிரிழந்துள்ளதாக காசாவில் உள்ள சுகாதார அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் அஷ்ரஃப் அல்-குத்ரா தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலில் காசாவில் பலி எண்ணிக்கை 10 ஆயிரத்தை நெருங்கியுள்ளதோடு அங்கு ஏராளமான கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகியுள்ளன.

இதற்கிடையே காசாவில் உள்ள மிகப்பெரிய அகதிகள் முகாமான ஜபாலியா முகாம் மீது இஸ்ரேல் வான் வழித்தாக்குதல் நடத்தியதில் 195 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஙி-5-6)

...ர்
...ா

...த்
...ன்
...ற்
...ள்
...ரி
...று
...நா
...6)

# பாலஸ்தீனத்தை தனிநாடாக அறிவிக்க வேண்டும் - போப்


(வோஷிங்டன்)

பாலஸ்தீனத்தை தனிநாடாக அறிவிப்பதன் மூலமே அங்கு நடந்துவரும் போருக்கு தீர்வு காண முடியும் என பாப்பரசர் போப் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

ஜெருசலேம் நகரம் தற்போது இஸ்ரேல் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிலையில், ஐ.நா நிர்வகிக்கும் வகையில் அந்நகருக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் அடுத்த மாதம் துபாயில் நடைபெற உள்ள ஐ.நா காலநிலை மாற்ற மாநாட்டில் பங்கேற்க போவதாக தெரிவித்த அவர் போர் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அரசியல் தலைவர்களை வலியுறுத்த போவதாகவும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் காலநிலை மாநாட்டில் போப் பாப்பரசர் ஒருவர் பங்கேற்பது இதுவே முதல்முறையாகும். (ஙி-5-6)



# ... - ட்ரக் கோரவிபத்து
# ...ந்தை உட்பட 6 பேர் பலி



...ன் பஞ்சாப்
...சங்கூர் -
... சௌக்
...டம்பெற்ற
...குழந்தை
...ர் உயிரி
...இந்திய ஊட

கங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த விபத்தானது. கார் ஒன்று ட்ரக் மீது நேரு க்குநேர் மோதியதில் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரில் பயணித்தவர்கள் அனைவரும் புனித யாத்திரையை முடித்து விட்டு வீடு திரும்பும் போது இந்த விபத்தில் சிக்குண்டதாகவும் கூறப்படுகிறது.

உயிரிழந்தவர்களின் உடல்கள் பிரேத பரிசோதனைக்காக அருகில் உள்ள அரச வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் காயமடைந்தவர்களும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பஞ்சாப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஙி-5-6)

# ஹமாஸ் மீது ஸ்பாஞ்ச் குண்டுகளை பயன்படுத்த இஸ்ரேல் தீர்மானம்

(ஜெருசலேம்)

ஹமாஸ் மீது ஸ்பாஞ்ச் குண்டுகளை பயன்படுத்த இஸ்ரேல் இராணுவம் தீர்மானித்துள்ளது.

காசாவில் சுமார் 20 ஆண்டுகள் கடுமையாக முயன்று பூமிக்குள் வலைப்பின்னல்களைப் போல ஹமாஸ் சுரங்கங்களை உருவாக்கி வைத்துள்ளதாகவும் அங்கிருந்து ஹமாஸ் குழுவினர் வெளியே வந்து எதிர்பாராத விதத்தில் தம் மீது தாக்குதல் மேற்கொள்ளலாம் என்ற அச்சம் இஸ்ரேல் படையினரிடம் தோன்றியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.




ஹமாஸ் போராளிகள் கொரில்லா தாக்குதல் நடத்தினால் தங்கள் தரப்பில் பெரும் உயிர்ச்சேதம் ஏற்படும் என்ற அச்சத்தினாலேயே இஸ்ரேல் இராணுவத்தினால் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் துறையினரின் ஆலோசனைகளை பாதீட்டில் உள்ளடக்க எதிர்பார்ப்பு

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

பொருளாதாரத்தைப் பலப்படுத்த தனியார் துறையினர் முன்வைக்கும் யோசனைகளை பாதீட்டு திட்டத்தில் உள்வாங்க எதிர்பார்ப்பதாகவும், அதற்காக ஒவ்வொரு துறைகளையும் தனித்தனியாக ஆராய விருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தனியார் துறை நிறுவனங்களின் பிரதானிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியிலிருந்து மீண்டு, வளர்ச்சிப் பாதையில் பயணிப்பதை நோக்காகக் கொண்ட மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் தனியார் துறை பிரதானிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தையில்கவனம் செலுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இதன்போது அரச வருமானம் மற்றும் செயற்திறனைப் பலப்படுத்தல், முதலீட்டாளர்களை ஈர்த்தல், சுற்றுலாத்துறை, ஆடைக் கைத்தொழில் உள்ளிட்ட பல்வேறு துறைகளையும் ஊக்குவிக்கும் யோசனைகளை தனியார் நிறு வனபிரதானிகள் இதன்போது ஜனாதிபதியிடம் கையளித்துள்ளனர்.

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்ட பின்னர் முன்னெடுக்கும்.

திட்டங்கள் பல்வேறு துறைகளிலுள்ள பிரச்சினைகளுக்கான தீர்வுகள் ஆகியன குறித்தும் இந்த முறை பாதீட்டு திட்டத்தில் கவனம் செலுத்துமாறும் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

தனியார் துறையினர் முன்வைத்த யோசனைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும், எதிர்வரும் நாட்களில் ஒவ்வொரு துறை தொடர்பிலும் தனித்தனியே. கலந்துரையாட எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

## மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

சர்வர்தேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்று சற்று அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 82.62 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 86.98 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.


இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 3.50 அமெரிக்க டொலராக நிலவுகிறது. (நி-5-6)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 300 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 300 | 450 |
| தக்காளி | 250 | 250 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 100 | 150 | 150 |
| கோவா | 280 | 240 | 240 | 300 |
| கரட் | 350 | 350 | 350 | 400 |
| பூசணி | 80 | 80 | 60 | 100 |
| புடோல் | 250 | 200 | 120 | 250 |
| வாழைக்காய் | 200 | 180 | 160 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 300 | 320 | 300 | 360 |
| பாகற்காய் | 400 | 450 | 350 | 400 |
| வெண்டக்காய் | 250 | 200 | 160 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 400 | 400 | 250 | 400 |
| லீக்ஸ் | 200 | 250 | 200 | 300 |
| பீற்றூட் | 140 | 140 | 150 | 300 |
| கறிமிளகாய் | 500 | 350 | 300 | 500 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 300 | 400 |
| போஞ்சி | 400 | 450 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 320 | 280 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 120 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1600 | 1800 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 400 | 450 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 250 | 350 | -- | 500 |
| முள்ளங்கி | 80 | 150 | -- | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 160 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 150 |




விதுரன்




விஜிதன்




வான்மதி





நர்மதா




நிலோஷ்




நிறைஞ்சனா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தண்ணிமுறிப்பு குளத்தில் சட்டவிரோத மீன்பிடி

## இருவர் கைது

(நெளுக்குளம்)

தண்ணிமுறிப்பு குளத்தில் நீதிமன்ற உத்தரவையும் மீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இரண்டு மீனவர்கள் கைதான நிலையில் பலர் தப்பிச் சென்றுள்ளனர். அவர்கள் வருகை தந்த 15 மோட்டார் சைக்கிள்களும் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் குறித்த பகுதியில் சுமார் 50 இற்க்கும் மேற்ப்பட்ட பெரும்பாண்மையினத்தை சேர்ந்த மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததை அவதானித்த அப் பகுதி மக்கள் இது குறித்து ஒட்டுசுட்டான் பொலிஸாருக்கும் தெரிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் அவ்விடத்திற்கு வருகைதந்த போது அங்கு மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இரண்டு மீனவர்களை கைது செய்ததோடு ஏனையவர்கள் தப்பித்து சென்ற நிலையில் அவர்களுடைய 15 மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து சென்றனர்.

முல்லை மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தண்ணிமுறிப்பு குளத்தில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு தண்ணிமுறிப்பு நன்னீர் மீன்பிடி சங்கத்தினருக்கும், கிச்சிராபுரம் நன்னீர் மீன்பிடி சங்கத்தினருக்கும் மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் கடந்த (05.08.2023) அன்று வெலிஓயா பகுதியிலிருந்து வருகை தந்த பெரும்பான்மை இனத்தை சார்ந்த மீனவர்கள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் 38 பேரையும் அவர்கள் மீன் பிடிக்கு பயன்படுத்திய உபகரணங்களையும் சிறைப்படுத்திய குறித்த குளத்திற்கு உரித்தான மீனவர்கள் ஒட்டுசுட்டான் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

கைதானவர்களை பொலிஸார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் இனிமேல் குறித்த குளத்திற்கு மீன்பிடிப்பதற்கு வரமாட்டோம் என தெரிவித்ததன் அடிப்படையில் நீதிமன்றில் இருந்து விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)



வடக்கு மாகாணத்திலுள்ள மருத்துவமனைகளில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரின் வேலை நிறுத்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் மருத்துவர்கள் நேற்று பணி பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர். (படம்- தேவானந்தம்)

# பரந்தனில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுப்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி பரந்தன் நகர்ப் பகுதியில் டெங்கு ஒழிப்பு பணி முன்னெடுக்கப்பட்டது.


கண்டாவளை சுகாதார பணிமனையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் பரந்தன் நகரப் பகுதியில் குறித்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கை இடம் பெற்றது.

இதன்போது சுகாதார பரிசோதகர்கள் இராணுவத்தினர், பாடசாலை மாணவர்கள், கரைச்சி பிரதேச சபை ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர். (நி-5-6-316)

# ஆளுமைமிகு தலைமுறையினர் உருவாக பாடசாலைகளே களம் அமைக்க வேண்டும்

(தருமபுரம்)

ஆளுமைமிகு அடுத்த தலைமுறையின் உருவாக்கத்துக்கு பாடசாலைகளே களம் அமைக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.



நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சொந்த நாட்டில், தனது இருப்பைத்தக்கவைப்பதற்காக, எல்லாவகையிலும் போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள தமிழர்களின் அடுத்த தலைமுறை, கல்வித் தளத்திலும் அறிவுப் புலத்திலும் தம்மைத்தாமே நிலைநிறுத்தத் தவறின் எமது இனம் இருப்பழிந்து போய்விடும் என்கிற உண்மையை பிள்ளைகளுக்கு உணர்த்துவதன் மூலம் ஆளுமைமிக்க அடுத்த தலைமுறையை உருவாக்க வேண்டிய சமூகக் கடமை பாடசாலைகளுக்கு உள்ளது என தெரிவித்தார். (நி-5-6-316)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவின் அளவெட்டிப் பகுதியில் அமைந்திருக்கும் கலாசார மத்திய நிலையம் மற்றும் கிராமிய நிலையங்களில் கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், சித்திரமும் வடிவமைப்பும், நாடகமும் அரங்கியலும் மற்றும் இசை வாத்தியக் கருவிகள் ஆகிய பாடநெறிகளை நடத்துவதற்கு வளவாளர்களை இணைத்துக் கொள்ள விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

எனவே குறித்த பாடநெறிகளை கற்பிக்க ஆர்வமுடைய தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வளவாளர்கள் (ஆசிரியர்கள்) தங்களது சுயவிபரங்களை எதிர்வரும் 18.11.2023 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம் தெல்லிப்பழை, அளவெட்டி தெற்கு, அளவெட்டி என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறும் மேலதிக தகவலுக்கு 077 977 0732, 075 976 9654 வாட்சப் 076 477 2486 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என அளவெட்டி கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி சி.மகிந்தன் அறிவித்துள்ளார். (நி-5-6)


## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

01.01.2024 தொடக்கம் 31.12.2024 வரையான காலப்பகுதிக்கு புலோப்பளை பொதுச்சந்தை மற்றும் இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் 2024

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 06.11.2023 தொடக்கம் 20.11.2023 வரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 21.11.2023 பிற்பகல் 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 21.11.2023 பிற்பகல் 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்.

பொதுச்சந்தை மற்றும் இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அட்டவணை

| இல. | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| புலோப்பளை உப அலுவலகம் | | | | |
| 01 | மரக்கறி மற்றும் மீன்சந்தை | 2,112,676.00 | 42,000.00 | 2,000.00 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | 2,338,050.00 | 46,000.00 | 2,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக்கடை | 83,050.00 | 5,000.00 | 2,000.00 |
| 04 | கோழியிறைச்சிக்கடை | 393,751.00 | 8,000.00 | 2,000.00 |
| முள்ளிப்பற்று உப அலுவலகம் | | | | |
| 05 | கோழி இறைச்சிக்கடை | 91,384.00 | 5,000.00 | 2,000.00 |

நியந்தனைகள்

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்க வேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 21.11.2023 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையில் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ள வேண்டும். மிகுதி தொகையினை 08 பகுதியாக பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்தமாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டமாக அறவிடப்படும்.
06. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத வாடகையினை கேள்வித்தொகையுடன் செலுத்தப்படல் வேண்டும்.
07. சித்திகர குத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
09. மாட்டிறைச்சிக்கடைகளை பெறுவோர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கொல்களத்திலேயே மாடு அறுத்தல் வேண்டும்.
10. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

[illegible] தர்சினி, செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை. 04.11.2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 326





கட்டுவதற்குச் சம்மதம் வாங்கி விடு!"

குந்தவை திகைத்துப் போய்ப் பேசாமலிருந்தாள்.

"பிறகு காஞ்சிக்குப் போ! அங்கே உன் அண்ணன் ஆதித்த கரிகாலனிடம் சொல்லி, 'இந்தச் சாபக்கேடு வாய்ந்த இராஜ்யம் எனக்கு வேண்டாம்' என்று சொல்லும்படி செய்துவிடு. மதுராந்தகனுக்கே பட்டம் கட்டிவிடுவோம். பிறகு நாம் எல்லாரும் சாபம் நீங்கி நிம்மதியாக இருக்கலாம்" என்றார் சக்கரவர்த்தி.

"அப்பா! அடிக்கடி சாபம் என்கிறீர்களே? எந்தச் சாபத்தைச் சொல்கிறீர்கள்?" என்று குந்தவை கேட்டாள்.

"மகளே! பூர்வ ஜன்மம் என்று சொல்லுகிறார்களே அதை நீ நம்புகிறாயா? பூர்வஜன்மத்தின் நினைவுகள் இந்த ஜன்மத்தில் சில சமயம் வரும் என்கிறார்களே, அதில் உனக்கு நம்பிக்கை உண்டா?"

"தந்தையே! அவையெல்லாம் பெரிய விடயங்கள். எனக்கென்ன தெரியும், அந்த விடயங்களைப் பற்றி?"

"மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களைப் பற்றிச் சொல்கிறார்களே! புத்தபகவான் கடைசி அவதாரத்திற்கு முன்னால் பல அவதாரங்கள் எடுத்ததாகச் சொல்கிறார்களே? அந்த அவதாரங்களைப் பற்றிய பல அழகான கதைகள் சொல்கிறார்களே?"

"கேட்டிருக்கிறேன், அப்பா!"

"கடவுளுக்கும் அவதார புருஷர்களுக்கும் அப்படியென்றால் சாதாரண மனிதர்களுக்கு மட்டும் முற்பிறவிகள் இல்லாமலிருக்குமா?"

"இருக்கலாம் அப்பா!"

"சில சமயம் எனக்குப் பூர்வஜன்ம நினைவுகள் வருகின்றன மகளே! அவற்றைக் குறித்து இதுவரையில் யாரிடமும் சொல்லவில்லை. சொன்னால் யாரும் நம்பவும் மாட்டார்கள் புரிந்து கொள்ளவும் மாட்டார்கள். எனக்கு உடல் நோயுடன் சித்தப் பிரமையும் பிடித்திருப்பதாகச் சொல்வார்கள். வைத்தியர்களை அழைத்து வந்து தொந்தரவு கொடுப்பது போதாது என்று மாந்திரீகர்களையும் அழைத்துவரத் தொடங்குவார்கள்"

"ஆம் தந்தையே! இப்போதே சிலர் அப்படிச் சொல்கிறார்கள். தங்கள் நோய், மருத்துவத்தினால் தீராது மாந்திரீகர்களை அழைக்க வேண்டும் என்கிறார்கள்."

"பார்த்தாயா? நீ அப்படியெல்லாம் நினைக்க மாட்டாயே? நான் சொல்வதைக் கேட்டுவிட்டுச் சிரிக்க மாட்டாயே?" என்றார் சக்கர வரத்தி.

"கேட்கவேண்டுமா, அப்பா! உங்களுடைய மனம் எவ்வளவு நொந்திருக்கிறது என்று எனக்குத் தெரியாதா? தங்களைப் பார்த்து நான் சிரிப்பேனா?" என்று குந்தவை கூறினாள். அவளுடைய கண்ணில் நீர் மல்கிற்று.

"எனக்குத் தெரியும், மகளே! அதனாலேதான் மற்ற யாரிடமும் சொல்லாததை உன்னிடம் சொல்கிறேன். என்னுடைய பூர்வ ஜன்ம நினைவுகளில் சிலவற்றை சொல்லுகிறேன் கேள்!" என்றார் சுந்தர சோழர்.

நாலுபுறமும் கடல் சூழ்ந்த ஓர் அழகிய தீவு. அத்தீவில் எங்கெங்கும் பச்சை மரங்கள் மண்டி வளர்ந்திருந்தன. மரங்கள் இல்லாத இடங்களில் நெருங்கிய புதர்களாயிருந்தன. கடற்கரையோரத்தில் ஒரு புதரில் வாலிபன் ஒருவன் ஒளிந்து கொண்டிருந்தான். சற்றுத் தூரத்தில் கடலில் பாய் மரம் விரித்துச் சென்ற கப்பல் ஒன்றை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். அது மறையும் வரையில் பார்த்துக் கொண்டு நின்றான். பிறகு "அப்பா! பிழைத்தோம்!" என்று பெருமூச்சு விட்டான். அந்த வாலிபன் இராஜ குலத்தில் பிறந்தவன். ஆனால் இராஜ்யத்துக்கு உரிமையுள்ளவன் அல்ல இராஜ்யம் ஆளும் ஆசையும் அவனுக்குக் கிடையாது.

(தொடரும்...)

ஆம் ஆதித்த கரிகாலனைக் கேட்க வேண்டியது தான். அவனைக் கேட்டால் மட்டும் போதாது. உன் பெரிய பாட்டி சம்மதிக்க வேண்டும்.

"பிள்ளைக்குப் பட்டம் கட்டினால் தாயார் வேண்டாம் என்று சொல்வாளா?"

"ஏன் சொல்ல மாட்டாள்? உன் பெரிய பாட்டியுடன் இத்தனை நாள் பழகியும் அவரை நீ அறிந்து கொள்ளவில்லையா? செம்பியன் மாதேவியின் வற்புறுத்தலினாலேயே நான் அன்று சிம்மாசனம் ஏறினேன். ஆதித்தனுக்கும் இளவரசுப் பட்டம் கட்டினேன். குந்தவை! உன் பெரியபாட்டிக்கு உன்பேரில் மிக்க அன்பு உண்டு. நீ அவரிடம் நயமாகச் சொல்லி மதுராந்தகனுக்குப் பட்டம்

---



# சிறுவர் அரங்கம்

## பிரபுவின் மனம்



வெயில் கொளுத்தும் பாதை சுட்டெரிக்க ஒரு வயதானவர் நடக்க முடியாமல், சோர்வாகி விழும் நிலையில் அவர் கண்களுக்கு ஒரு பெஞ்ச் தெரிந்தது. அவரிடம் இருந்த மொத்த வலுவையும் கொண்டு அந்த பெஞ்சில் அமர்ந்தார்.

அந்த ஊரில் மழை என்பது பொழிந்து கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் ஆகி விட்டது. அதனால் வெயிலின் தாக்கம் அந்த ஊரில் மிகவும் அதிகம்.

தூரத்தில் ஒரு குளத்தில் மட்டுமே நீர் இருந்தது. மக்கள் தங்கள் அன்றாட தேவைக்கு நடந்து சென்று நீர் எடுத்து வருவார்கள். அந்த வயதானவர் வந்து அமர்ந்த இடம் பிரபுவின் சிறிய கடை. அவரால் நிமிர்ந்து கூட பார்க்க முடியாத அளவுக்கு சோர்வாகி இருந்தார். பிரபு வித்தியாசமாக ஒருவர் அமர்ந்திருந்ததைக் கண்டு அருகில் வந்தான். அவர் வாயில் இருந்து தண்ணீர் என்ற வா[illegible] மட்டும் கேட்டது. பிரபு உடனடியாக அவன் வைத்திருந்த பானையில் இருந்த தண்ணீரை ஒரு டம்பளரில் கொடுத்தான். அவருக்கு தாகம் தீரவில்லை.

டம்ளரில் குடித்த [illegible] கடைக்கு சென்று அந்த பானை தண்ணீரை மொத்தமாக குடித்தார். பிரபுவின் அன்றைய மொத்த தண்ணீரும் அந்த பானைதான். அதுவும் தற்போது காலியாகி விட்டது.

பிரபு அவரை கடிந்து கொள்ளாமல் கனிவுடன் தாகம் தீர்ந்ததா ஐயா என்றான். அவரும் புன்முறுவலுடன் உன் கனிவான இந்த நடவடிக்கைக்காக உன்னை ஆசிர்வதிக்கிறேன். உன்னை எல்லாரும் ஆசிர்வதிப்பார்கள் இந்த பழக்கத்தை விட்டு விடாதே என்றார்.

அங்கிருந்து நடந்து அவன் கண்ணை விட்டு மறைந்தார். கொஞ்ச நேரம் கழித்து பிரபுவிற்கு பயங்கரமாக தாகம் ஏற்பட்டது. வெயிலின் தாக்கம் அவன் மண்டையை பிளக்க பானையில் ஒரு சொட்டு தண்ணீராவது இருக்காதா? என எண்ணி பானையை தூக்கி கொட்டினான்.

பானையில் மொத்தமாக இருந்த தண்ணீர் அவன் முகம் வாய் என கொட்டியது. அவன் தலைவலியும் போக தாகமும் அடங்க, தண்ணீரின் ருசி முன்பை விட மிகவும் அருமை யாக இருந்தது. அவன் அதிர்ச்சி மீளாமல் இருந்தான்.

அப்போது ரஹீம் முன்பொரு விபத்தில் நடக்க முடியாமல் போனவன், பிரபுவின் கடைக்கு வந்தான்.

அவன் கடையில் பருப்பு மற்றும் அரிசி வாங்கி கொண்டிருக்கும்போது தாகம் எடுக்க பிரபுவிடம் தண்ணீர் கேட்டான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
>
> – காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டது

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

மாகாண மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று (வெள்ளிக்கிழமை) தற்காலிகமாக நிறுத்துவதற்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்திடம் இருந்து கிடைத்த சாதகமான பதில் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

இதேவேளை வட மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் நேற்று வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## மலையகத் தமிழ் மக்களின் வியக்கவைக்கும் அரசியல்

இலங்கை மண்ணில் எங்கள் மலையகத் தமிழ்ச் சகோதரர்கள் பட்ட இன்னல்கள் கொஞ்சமல்ல. நாடற்றவர்களாக அவர்களைப் பிரகடனம் செய்தது மட்டுமன்றி, அடிப்படை வசதிகளான உணவு, உடை, உறையுள் என்பவற்றை வழங்காமல் அந்த மக்களை இந்த நாடு வஞ்சித்தது.

இதற்கும்மேலாக, அந்தமக்களின்உழைப்பை உறிஞ்சிய முதலாளித்துவ வர்க்கம் செய்த கொடுமை சொல்லிமாளா.

அதேநேரம் எங்கள் ஈழத் தமிழ் அரசியல் தரப்புகளும் மலையகத் தமிழ்ச் சகோதரர்களுக்காகக் குரல் கொடுக்கவில்லை என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

இருந்தும் காலஞ்சென்ற சௌமியமூர்த்தி தொண்டமான் மலையகத் தமிழ் மக்களின் உரிமைக்காக, அவர்களின் அடிப்படை வசதிகளுக்காகத் தனது அரசியல் வாழ்வை அர்ப்பணித்தவர்.

ஆம், ஆளும்தரப்புகளுடன் இணைந்துமலையகத் தமிழ் மக்களின் வாழ்வுக்காக தனது அரசியல் பயணத்தைப் பயன்படுத்தினார்.

அன்று மலையகத் தமிழ் மக்களுக்காகத் தொண்டமான் அமைத்த ஒற்றையடிப் பாதை இன்று பெருவழியாக ஆக்கப்பட்டிருப்பது கண்டு வியக்காமல் இருக்க முடியாது.

உண்மை. காலஞ்சென்ற அமைச்சர் தொண்டமானின் அரசியல் பாதையில் இன்று அவரது பூட்டப்பிள்ளைகளும் மற்றையவர்களும் நிதானமாகப் பயணிக்கின்றனர்.

சிங்கள ஆட்சித் தரப்புடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பெடுத்தாலும் அவர்கள் அரசியலில் தனித்துவம்மிக்கவர்களாக இருப்பது அவர்களின் அரசியல் இராஜதந்திரத்தின் மேன்மையை எடுத்துக் காட்டுகிறது.

உண்மை. ஆளுங்கட்சிகளுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பெடுத்தாலும் அவர்கள் ஆளுந் தரப்புக்கு அஞ்சாமல் தம் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கின்றனர்.

தேவையாயின் தமது அமைச்சுப் பதவிகளைத் தூக்கி எறிவதற்கும் அவர்கள் தயங்குவதில்லை.

அவ்வாறு அவர்கள் தமது மலையகத் தமிழ் மக்களுக்காகப் பதவிகளைப் பெற்று அதனூடு அந்த மக்களின் தேவைகளை நிறைவு செய்து வருகின்றனர்.

அதிலும் குறிப்பாகக் கல்வியில் மலையகத் தமிழ் மக்களின் எழுச்சி வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டிய முக்கிய அம்சமாகும்.

இவையாவற்றுக்கும் மேலாக, மலையகத் தமிழ் மக்களுக்கு இந்திய மத்திய அரசின் நிதி உதவியுடன் நிரந்தர வீடு அமைத்துக் கொடுக்கின்ற திட்டத்தை தொண்டமானின் அரசியல் வாரிசுகள் வெற்றிகரமாக முன்னெடுத்து வருவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

கூடவே கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் செந்தில் தொண்டமான் எவர்க்கும் அஞ்சாமல் நடத்துகின்ற நிர்வாகம் கண்டு எம் தோள் புயங்கள் உயருகின்றன.

உண்மையில் ஆளுந்தரப்புடன் இணைந்தாலும் தனித்துவத்துடனும் துணிச்சலுடனும் அரசியல் நடத்துகின்ற மலையகத் தமிழ் மக்களிடம் இருந்து நாம் அரசியலைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

## பால் உற்பத்தியை அதிகரிக்க அமெரிக்க நிறுவனம் ஒத்துழைப்பு

(கொழும்பு)

இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு தேவையான தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்க அமெரிக்க ஒத்துழைப்பு அமைப்பான International Executive Services தனது ஆதரவை தெரிவித்துள்ளது.

விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில், அதன் தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழு இது தொடர்பான கலந்துரையாடலை நடத்தியதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. நாளொன்றுக்கு சுமார் 100 லீற்றர் பால் உற்பத்தி செய்யும் சிறிய அளவிலான கறவை மாடு மேலாண்மை அலகுகளின் திறனை அதிகரிக்கவும், புதிய தொழில்நுட்பத்தை வழங்கவும் தேவையான தொழில்நுட்ப மற்றும் நிதி ஒத்துழைப்பை வழங்கவும் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. (நி-5-6)

## 'அஸ்வெசும' திட்டத்தை விரிவாக்க விசேட வாரம் நிதியமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

அஸ்வெசும திட்டத்தை விரிவாக்கவும் தற்போது காணப்படும் பிரச்சினைகளை தீர்க்கவும் நாளை மறுதினம் முதல் விசேட வாரத்தை நடைமுறைப்படுத்த நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி வரை இந்த விசேட வாரம் நடைமுறைப்படுத்தப்படுமென அமைச்சு கூறியுள்ளது.

அஸ்வெசும நிவாரணத் திட்டத்தில் நிலவும் பிரச்சினைகளை உடனடியாக சரி செய்து, தாமதமின்றி தகுதியான பயனாளிகளுக்கு உரிமைகள் வழங்கப்படுவதை உறுதி செய்யும் நோக்கில் இந்த விசேட வாரம் அமுல்படுத்தப்படுகின்றது.

இதுவரையில் கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைக்காத குடும்பங்களுக்கு உடனடி உதவிகள் வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (நி-5-6)

## ராஜபக்ஷக்களுடன் மீண்டும் இணையப் போவதில்லை-கம்பன்பில

(கொழும்பு)

ராஜபக்ஷக்களின் முறையற்ற செயற்பாடுகளினால்தான் நாடு வங்குரோத்து நிலையடைந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில குற்றம் சுமத்தியுள்ளதுடன் மீண்டும் ராஜபக்ஷக்களுடன் இணைந்து செயற்படப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த உதய கம்மன்பில, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைகள் கட்சியின் அடிப்படைக் கொள்கைக்கு எதிராக செயற்பட்டதால் பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறி பங்காளி அரசியல் தரப்பினரை ஒன்றிணைத்து கூட்டணியாக செயற்படுகிறோம்.

இந்நிலையில், எதிர்வரும் தேர்தல்களில் எமது கூட்டணியை முன்னிலைப்படுத்தி போட்டியிடுவோம்.

அதே வேளை பொதுஜன பெரமுனவுடன் மீண்டும் இணையும் நோக்கம் எமக்கில்லை. ராஜபக்ஷர்களுடன் ஒன்றிணையப்போவதில்லை.

எனவே எதிர்வரும் 2024ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களில் எமது கூட்டணியை முன்னிலைப்படுத்தி போட்டியிடுவோம் என்பதில் உறுதியாக இருக்கின்றோம்.

மறுபுறம் பொதுஜன பெரமுனவின் அரசியல் நிலைப்பாடு தற்போது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

ஆகவே அவர்கள் ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டணியமைத்து போட்டியிடலாம் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5-6)

## சர்வதேச காலநிலை பல்கலைக்கு 600 ஏக்கர் காணி ஒதுக்கீடு

(கொழும்பு)

சர்வதேச காலநிலை பல்கலைக்கழகத்தை நிர்மாணிப்பதற்காக கொத்மலை நீர்த்தேக்கத்தை அண்மித்து 600 ஏக்கர் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

காலநிலை அனர்த்தங்களுக்கு ஈடுகொடுக்கவும், பசுமை பொருளாதார மாற்றத்திற்கும் தேவையான திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது சர்வதேச காலநிலை மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார். (நி-5-6)

## உதவிகளை வழங்குவதற்கு தென்கொரியா இணக்கம்

(கொழும்பு)

தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோல், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு எழுதியுள்ள கடிதத்தில், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டங்களை மேம்படுத்துவதற்கு தென் கொரியா முழுமையான ஆதரவை வழங்கும் என உறுதியளித்துள்ளார்.

மேலும், வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு கட்டமைப்பு மூலம் தங்கள் வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை மேம்படுத்த முடியும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் எதிர்காலத்தில் மீண்டும்ஒரு முறை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திப்பதற்கு ஆவலாக இருப்பதாகவும் தென் கொரிய ஜனாதிபதி விருப்பம் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** சங்குவேலி Heritage உடுவில் சங்குவேலி, உடுவில் மகளீர் கல்லூரி பிரிட்டிஷ் கவுன்சில், தியாகி அறக்கொடை நிலையம், கைலாச பிள்ளையார் கோவில், நாவலர் வீதி, இராசாவின் தோட்டம், ரக்கா வீதி, கோயில் வீதி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** சிவகுரு அரிசி ஆலை சிவநகுட்செல்வன் அரிசி ஆலை, கிங்ஸ் விடுதி, கிராஞ்சி, சிவபுரம் ,கிராஞ்சி நீர்ப்பாசன சபை, பாலாவி பொன்னாவெளி, வலைப்பாடு, வேரவில் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

**வடமாகாண மரநடுகை மாதம்**

**கார்த்திகை - 2023**

**"ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நாட்ட வேண்டும்"**

*-அலெக்சான்டர் சிமித்(ஸ்கொட்லாந்துக் கவிஞர்)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

28



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

கி.பி. 3 - 4 ஆம் நூற்றாண்டுகளில் பயன்படுத்தப்பட்ட இந்நாணயங்கள் அநுராதபுரம் அகழ்வுகளின்போதும் வட பிராந்திய அகழ்வுகளின் போதும் பெருமளவு கண்டெடுக்கப்பட்டுள்ளன."லக்ஷ்மி பளிங்குக்கல்" கி.மு. 3ஆம் மற்றும் கி.பி. 8 ஆம் நூற்றாண்டுகளில் பெண்ணின் உருவத்துடன் கூடிய நாணயங்கள் முதற் தடவையாக இலங்கையில் சுற்றோட்டத்தில் காணப்பட்டன. நாணயங்களின் முகப்பில் காணப்படுகின்ற பெண் லக்ஷ்மி என கருதப்படுகின்றது. ஆதலால் இந்நாணயங்கள் லக்ஷ்மி தகடு நாணயங்கள் என அழைக்கப்படுகின்றன.

"கஹவானு அல்லது லங்கேஸ்வரா நாணயங்கள்" சிங்களவர்களின் தங்க நாணயம் 'ஹகவனு' என அறியப்பட்டதுடன் இது கி.பி 7ஆம் நூற்றாண்டிலிருந்து 8ஆம் நூற்றாண்டு வரை பயன்படுத்தப்பட்டது. இவை தங்க உலோகத்தினாலும் தங்க முலாம் பூசப்பட்டும் தயாரிக்கப்பட்டிருந்ததோடு. பெறுமதிக்கு ஏற்ப "கஹவனு". "அட் கஹவனு". "தெஹக" மற்றும்"அக" என்றவாறு பயன்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை கப்பல்துறை மத்திய நிலையமாக காணப்பட்டதால் சர்வதேச வர்த்தகத்தின்போது கொடுக்கல் வாங்கலுக்காகப் பயன்படுத்தப்பட்ட கிரேக்க. உரோம. சீன. அரேபிய மற்றும் இந்திய நாணயங்கள் பலவும் அநுராதபுரம். யாழ்ப்பாணம். மிகிந்தலை. சீகிரியா. குருணாகல். மாத்தறை. அகு ருகொட மற்றும் பதுளை ஆகிய பிரதேசங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பொலன்னறுவை முதல் கோட்டை இராச்சியம் வரைசெப்பு பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட இக்காலத்து நாணயங்களில் அப்போது ஆட்சியிலிருந்த மன்னர்களின் பெயர் அச்சிடப்பட்டிருந்தமை இவற்றில் காணப்பட்ட விஷேட அம்சமாகும். முதன் முதலில் ஆட்சியாளரின் பெயருடன் நாட்டில் வெளியிடப்பட்ட நாணயங்களும் இக்காலங்களில் தான் என்கிறது வரலாறு.

சோழர்களின் ஆதிக்கத்தை முறியடித்து நாட்டை ஒரு கொடியின் கீழ் கொண்டு வந்ததுடன் பெலன்னறுவை இராசதானியை ஆரம்பித்து வைத்த முதலாவது விஜயபாகு மன்னரும் 'கஹவனு' நாணயங்களை வெளியிட்டுள்ளார். அவர் நாணயங்களை தயாரிக்கின்ற போது அவற்றின் மேல் தமது பெரையும் பொறித்துள்ளார். இதன் படி நாணயங்களில் தமது பெயரைப் பொறித்து அவற்றை வெளியிட்ட முதலாவது சிங்கள மன்னர் முதலாவது விஜயபாகு மன்னராவார்.

அந்த நாணயம் மோசா என அழைக்கப்பட்டுள்ளது.இக்காலத்து நாணயங்களில் உள்ளடங்கியுள்ள உருவப் படங்கள் அநேகமாக அநுராதபுர காலகட்டத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களை ஒத்தவையாகக் காணப்படுகின்றன. நாணயத்தின் ரு பக்கத்தில்ஆடை ஒரு மனிதன் வலது றம் நோக்கியவாறு உருவமொன்று பாறிக்கப்பட்டுள்ளது. செப்பினால் தயாரிக்ப்பட்ட மோசா (மஸ்ஸ) நாணயத்திலும் தே உருவத்தைக் காணக்கூடிய தாக ள்ளது. நாணயத்தின் மறு பக்கத்தில் மர்ந்த நிலையிலுள்ள ஒரு உருவம் ணப்படுகின்றது. அதேபோன்று நாண த்தின் இரு புறத்திலும் பல்வேறு விதத்தி ன அடையாளங்களும் குறியீடுகளும் ணப்படுகின்றன.

பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் ி (மஸ்ஸ)' மற்றும் 'பணம' எனப்படும் ள்ளியினாலான இரண்டு நாணய கள் பயன்பாட்டுக்கு வந்தன. ஆயி காலமளவில் 'ரன் பணம' மற்றும் 'ரன் ' ஆகிய தங்க நாணயங்கள் ஓரளவு பாட்டில் காணப்பட்டன. அதன் பின்னர் ம் மஸ்ஸ'. 'பொடி தங்கம்'. 'ரிதிய' நாணயங்கள் பயன்படுத்தப்பட்டன. ாட்டாம் நூற்றாண்டுகளில் இந்திய நாணயங்கள் இலங்கையில் பயன் ப்பட்டது.

ப்பாணத்திலே வெவ்வேறு காலத் சேர்ந்த நாணயங்கள் பல்வேறு தொகைகளிலே கந்த ரோடை. வல்லிபுரம். நாகர்கோவில். புலோலி. மட்டுவில். நல்லூர். கோப்பாய். அச்சுவேலி. கொக்குவில். மானிப்பாய். பண்டத்தரிப்பு. தெல்லிப்பழை. தொல்புரம். வட்டுக் கோட்டை. அல்லைப்பிட்டி. மண்கும்பான். நாரந்தனை. புங்குடுதீவு முதலிய இடங்களிலே கிடைத்திருப்பினும். கந்தரோடை. வல்லிபுரம் ஆகிய இடங்களிலேயே அதிகமாகக்கிடைத்துள்ளன.

பெரும் மழையின் பின்னரோ. நிலத்தினைப் பயன்படுத்தும் போதோ. கட்டிடத்திற்கு அத்திவாரம் வெட்டும்போதோ பல நாணயங்கள் கிடைத்துள்ளன.18.09.2020 அன்று மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் சந்திக்கு அருகில் உள்ள வடக்கு வீதி என்ற இடத்தில் வீடு கட்டுவதற்காக குழிகள் வெட்டிய போது ஒரு குழியில் காணப்பட்ட பானையில் இருந்து 1904 நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

### இலங்கையில் வன்னியர்கள்

"வன்னியர் "என்றசொல் வலிமை நிறைந்த என்ற பொருளில் ஒரு குறிப்பிட்ட தமிழ் சமூகத்திற்கு வழங்கப்பட்டுவரும் பெயராகும். தமிழகத்தில் வன்னியர் என்ற சமூகம் மிக நீண்ட காலமாக தனித்துவ அடையாளங்களோடு இருந்து வருகிறது. தமிழகத்தின் வடபகுதியில் பரந்துவாழும் இச்சமூகம் பற்றி இலக்கியங்களில் பல ஆதாரங்கள் உள்ளன.

கல்லாடம். சிலை எழுபது வன்னியர் புராணம். வன்னி யர் குலநாடகம். வன்னியர் குல கல்யாணக் கொத்து என்னும் நாவல்கள் அவர்களது தோற்றம் பற்றிய விரிவான தகவல்களைத் தருகிறது அத்தோடு அவர்கள் படைக்கலப் பயிற்சிகளில் கொண்டிருந்த சிறப்பான திறமைகளையும் அவை விபரிக்கின்றன.

பெரும்பாலும் இராணுவ அமைப் புகளில் சிறப்பிடம் பெற்றிருந்த வன்னியர்கள் சிறந்த வில்லாளி களாகவும் இருந்தனர். பண்டைய காலத்தில் பல்லவ. பாண்டிய. அரசுகளில் மாத்திரமின்றி சோழர்கால அரசிலும் வன்னியர்களின் படைத் தொகுதி சிறப்பிடம் பெற்றிருந்தது.

சோழப் பெருமன்னர் காலத்தில் படைத் தொழிலில் சிறப்புப்பெற்று விளங்கிய இவ் வன்னியர்கள் அவர்களது இராணுவ சேவைக்கு ஊதியமாக வழங்கப்பட்ட பல பகுதி நிலங்களில் செறிந்து வாழ்ந்தனர். இவ்வாறு வன்னியர்கள் கூட்டமாக நிறைந்திருந்த பிரதேசங்கள் "வன்னிப் பற்றுக்கள் "என்று அழைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஈழத்தில் பொலநறுவைக் காலத்திலும் (கி.பி993 - 1215). அதன் பின்பும் தமிழகத்திலிருந்து வன்னியர்களின் வருகை நிகழ்ந்தது. ஈழத்தில் சோழர்களுடன் வந்த வன்னிய பிரதானிகள் தமக்கென தனியான வேலைக்கார பிரிவுகளையும் கொண்டிருந்தனர். சோழர் ஆட்சிக் காலத்தில் ஈழத்தின் நிர்வாகத்தில் வன்னிப்பற்றுக்கள் என்ற பிரிவுகள் காணப்பட்டன.

இரு நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக செல்வாக்குப் பெற்றிருந்த வன்னிய பிரதானிகளும் வேலைக்காரர்ளும் காலப் போக்கில் ஈழத்தின் பல பகுதிகளில் சுயாட்சி வன்னிப் பற்றுக்கள் தோன்றுவதற்கு வழிவகுத்தார்கள் எனலாம்.

இலங்கையில் 13ஆம் நூற்றா ண்டு காலப்பகுதியில் வன்னியரசுகளின் தோற்றம் நிகழ்ந்தது. தமிழகத்திலிருந்து வந்து பல பிரதேசங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களோடு ஆட்சிசெய்த வன்னி அரசுகள் இலங்கையில் நிகழ்ந்த பேரசுகளின் வீழ்ச்சியின் பின்னர் சுயாட்சி அதிகாரம் பெற்றன. அங்கு சிற்றாசர்களாக அரசு புரிந்தவர்களை வன்னி அரசர் அல்லது வன்னிபம் என்றழைக்கும் வழக்கம் உருவானது. அக்காலத்தில் இலங்கையில் ஆறு வன்னிப் பிராந்தியங்கள் இருந்தன.

அவைமுறையே. 1. அடங்காப் பற்று. (வன்னி) 2. திருகோணமலைப் பிரதேசம். 3. மட்டக்களப்புதேசம். 4. நுகரகலாவிய 5. புத்தளம். சிலாபம். (தெமளஹ ஊத்பத்து) 6. ஊவாவெல்லஸ்ஸ என்பனவாகும். இவற்றில் நுவர கலாவிய. ஊவாவெல்லஸ்ஸ ஆகிய இரு வன்னிகளும் சிங்கள வன்னி பற்றுகளால் ஆளப்பட்டவையாகும். இவர்களை ஸ்ரீவன்னி. மகா வன்னி. வன்னி ராஜ என அழைப்பது வழக்கமாகும். ஏனைய நான்கு வன்னிப் பிரதேசங்களும் தமிழ் வன்னிபங்களால் ஆளப்பட்டவை யாகும். வன்னியர் சுயாட்சியதிகாரம் கொண்ட சிற்றாசர்களாக விளங்கினர். நிர்வாகம். நீதி பரிபாலனம். வேளாண்மை போன்ற ஏற்பாடுகளை அவர்கள் கண்காணித்தனர். தமக்கெனப் படைப் பிரிவுகளைக் கொண்டிருந்த அவர்கள் தமது நிர்வாகத்துக்குட்பட்ட பிரதேசங்களில் வரி அறவிடும் அதிகாரம் பெற்றிருந்தனர்.சுயாட்சி அலகுகளான இவ் வன்னிபங்கள் சிற்சில காலங்களில் யாழ்ப்பாண. கண்டி அரசுகளின் மேலாதிக்கத்திற்கு உட்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இவ் வன்னிமைகள் கண்டு. யாழ்ப்பாண மேலாதிக்கத்திற்கு உட்பட்டிருந்த காலங்களில் அவற் றுக்கு ஆண்டுதோறும் திறை செலுத்தியிருக்கின்றன. அத்துடன் போர்க்காலங்களில் அவ்வரசர்கள் சார் பாக படை திரட்டியதோடு போர் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கிச் செயற்பட்டும் இருக்கிறது.

பலசமயங்களில் இவ்வரசக ள் இராச்சியங்களின் முக்கியவிடயங்களில் வன்னிபங்களுக்கு கௌரவமானபங்கு கொடுத்திருப்பதையும்? வரலாற்றாதாரங்கள்?மூலமாக அறியக்கூடியதாக உள்ளது.

### அடங்காப்பற்றில் வன்னியர்

இலங்கையில் புராதன காலத்தில் காணப்பட்ட இராச்சியங்களில் அடங்காப்பற்று எனப்படும் வன்னிராச்சிய வரலாறுகள் வித்தியாசமானவை. இலங்கையில் வட பகுதியின் வடக்கே ஆனையிறவுப் பரவைக் கடலையும் கிழக்கே முல்லைத்தீவுக் கடலையும். தெற்கே நுவரகலாவியவையும் மேற்கே மன்னார் கடலையும் எல்லைகளாகக் கொண்ட பிரதேசமே அடங்காப்பற்று எனப்படும் வன்னியாகும்.

இப்பிரதேசத்தில் வாழ்ந்த பூர்வீக குடிகள் சுதந்திரமாக இருந்தனர். புவியியல் அமைப்பு. சூழல். சமூக வாழ்க்கை முறை காரணமாக அவர்கள் யாருக்கும் அடி பணியாமல் இருந்தனர். யாழ்ப்பாண ஆட்சியினருக்கோ. சிங்கள ஆட்சியினருக்கோ அடங்காமல் இருந்த பிரதேசம் என்பதால் இப்பகுதி "அடங்காப்பற்று" எனப் பெயர் பெற்றது.

இவ்வாறாகச் சிறப்புப் பெற்ற அடங்காப்பற்று எனப்படும் வன்னி இராயச்சியத்தை ஆரம்பத்தில் ஆட்சி புரிந்த வன்னியர்கள் பனங்காமத்தைத் தமது தலை நகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். பின்பு முல்லைத்தீவைப் பிரதான தலைமைப் பீடமாக இடம் மாற்றிக்கொண்டனர். இந்த வன்னி இராச்சியத்தை இரண்டு வகையானவர்கள் ஆட்சி புரிந்ததாகக் கூறப்படுகின்றது. வன்னியர்கள் எனப்படுவோரும் மற்றும் மாப்பாணர்கள் எனப்படுவோரும் ஆட்சி புரிந்தனர்.

இந்த வன்னி நிலத்தை இறுதியாக ஆட்சிசெய்த தமிழ் மன்னனாக பண்டார வன்னியன் காணப்படுகின்றார். இவ்வாறு பண்டாரவன்னியன் வன்னியை ஆட்சிசெய்த காலத்தில். மேலைத்தேய அந்நியப் படைகளான போர்த்துக்கீசர். ஒல்லாந்தர். பிரித்தானியர் என அனைவரும் வன்னி மண்மீது படையெடுத்ததாக வரலாறுகள் கூறுகின்றன.

இவ்வாறு படையெடுத்துவந்த அந்நியப்படைகளுக்கு பண்டாரவன்னியன் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்தார். குறிப்பாக. போர்த்துக்கீசப் படைகள் 1621ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோதும். அவர்களால் பண்டாரவன்னியனின் ஆட்சிக்குட்பட்டிருந்த வன்னி மண்ணினை நெருங்க முடியவில்லை என வரலாற்று ஏடுகள் குறிப்பிடுகின்றன.

இவ்வாறு வன்னியைக் கைப்பற்ற முடியாமலேயே போத்துக்கீசரின் ஆட்சி இலங்கையில் முடிவிற்குவர. அதன் பின்னர் வந்த ஒல்லாந்தப் படைகளும் வன்னிமீது படைதொடுத்தன. இவ்வாறு வன்னிமீது படைதொடுத்த ஒல்லாந்தப் படைகளாலும் வன்னி முழுவதையும் கைப்பற்ற முடியவில்லை.இவ்வாறு படையெடுத்து வந்த ஒல்லாந்தர் படைகள் 1715ஆம் ஆண்டு முல்லைத்தீவில் கோட்டை ஒன்றை நிறுவிய தாக வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்படியாக முழுமையாக வன்னியை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரமுடியாமலே ஒல்லாந்தரும் இலங்கையை விட்டு வெளியேற. அதன் பின்னர் வந்த பிரித்தானியப் படைகளும் வன்னிமீது தமது ஆக்கிரமிப்பு நடவடிக்கையைத் தொடர்ந்தன.

பிரித்தானியப் படைகள் வன்னியின் பெருமளவான இடங்களைக் கைப்பற்றிய போதும். எதற்கும் தளர்ந்துவிடாத பண்டார வன்னியன். இறுதியாக முல்லைத் ஸ்ரீதீவிலி ருந்து வற்றாப்பளை அம்மன் கோவில் வரையுள்ள இரண்டாயிரம் சதுர மைல் நிலப்பரப்பில் தனது ஆட்சியை தொடர்ந்து முன்னெடுத்து வந்ததாகவும் வரலாற்று ஆவணங்கள் கூறுகின்றன.

அத்தோடு. ஒல்லாந்தரால் முல்லைத் தீவில் அமைக்கப்பட்டிருந்த கோட்டையை பிரித்தானியர்கள் 1795ஆம் ஆண்டு மீளுருவாக்கம் செய்து. அதனை படைத் தலைமையகமாகப் பயன்படுத்தி வந்த நிலையில். அந்தக் கோட்டையை 1803ஆம் ஆண்டு. ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி பண்டாரவன்னியன் தகர்த்ததுடன். அந்தக் கோட்டையிலிருந்த பிரித்தானியப் படைகளின் பீரங்கிகளையும் கைப்பற்றியதாகவும் வரலாறுகள் கூறுகின்றன.

அதன் பின்னர் குறுநில மன்னனான காக்கைவன்னியன். முன்விரோதம் காரணமாக பிரித்தானியருக்கு பண்டாரவன்னியனைக் காட்டிக்கொடுத்ததாகவும். அதன்படி 1803 அக்டோபர் மாதம் 31ஆம் திகதி பிரித்தானியத் தளபதி ரிபேக் என்பவரால் பண்டாரவன்னியன் கற்சிலைமடு என்ற இடத்தில் வீழ்த்தப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன.

கி.பி 1904 - கி.பி 1905 இல் முல்லைத்தீவுப் பிரிவிற்கு உதவி அரசாங்க அதிபராக ஆர்.ஏ.ஜி.வெஸ்ரிங் என்பவர் இருந்தார். கி.பி 1803 இல் பண்டார வன்னியனை கற்சிலைமடுவில் வொன் டிறிபேர்க் தோற்கடித்ததை உறுதிப்படுத்த கி.பி 1904 இல் அதாவது சுமார் நூறு வருடங்களின் பின்னர் ஒரு நடுகல்லை அமைத்தார்.

இந்தக் கல்லிலே "HERE ABOUTS CAPTAIN VON DRIEBERG DEFEATED PANDARA VAWNIYAN 31ST OCTOBER 1803."என்று பொறிக்கப்பட்டுள்ளது. இதைப் படத்தில் காணலாம். வன்னிக்குள் முதலில் வெற்றிகரமாக நுழைந்தவர்கள் டச்சுக்காரர்கள் என நாம் குறிப்பிடும் ஒல்லாந்தர்கள். 1782இல் வன்னியை கைப்பற்ற அவர்கள் நடத்திய போர் பற்றி எழுதும் லூயி என்ற வரலாற்று ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "ஒல்லாந்தர்கள் எத்தனையோ நாடுகளில் போர் நடத்தியிருக்கிறார்கள். ஆனால் இப்படி வீரத்துடன் போரிட்டவர்களை உலகில் எங்கும் அவர்கள் காணவில்லை" என்று. ஒல்லாந்தர் காலத்திலும் பின்னர் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்தும் மன்னார். திரிகோணமலை வன்னிக்காடுகள் என வன்னியர்கள் இடைவிடா கொரில்லா போர் நடத்தி வந்தனர். அவர்களில் ஒளிவிடும் மாணிக்கமாய் வந்தவர்களில் ஒரு மாவீரன்தான் பண்டார வன்னியன்.

பண்டாரவன்னியன் முல்லைத்தீவுக் கோட்டையை வெற்றிகொண்ட நாளான ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதியில் வருடந்தோறும் தமிழ் மக்கள் பண்டார வன்னியனை நினைவுகூருகின்றனர். முல்லைத்தீவில் பிரித்தானியர்களது கோட்டையிருந்த மாவட்டசெயலகத்துக்கு முன்பாக பண்டாரவன்னியனுக்குச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு. பண்டார வன்னியன் பிரித்தானியரால் வீழ்த்தப்பட்ட இடத்திலும் பண்டாரவன்னியனுக்குச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அங்கும் குறித்த தினத்தில் வருடந்தோறும் அஞ்சலிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்குள் காணப்படும். பண்டாரவன்னியன் தகர்த்த வெள்ளையர்களது கோட்டையின் ஒருபகுதி சிதைவடைந்த நிலையில் இன்றும் காணப்படுகின்றது. அந்தச் சிதைவடைந்த கட்டடம் முற்றாக அழிவடைந்துபோகும் நிலையை எட்டியுள்ளது.

காலனித்துவ ஆட்சிக்காலத்தில் பாவனையில் இருந்த நாணயங்கள் பற்றியும் அரசியியல் பற்றியும் மற்றுமொரு கட்டுரையில் ஆராய்வோம். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயங்கி...

இச்சம்பவம் கரவெட்டி, அரசடிச் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதில் வதிரியைச் சேர்ந்த நாகரத்தினம் இரவீந்திரன் (வயது- 66) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நண்பகல் 11.30 மணியளவில் கரவெட்டி, அம்பன் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக துவிச்சக்கரவண்டியில் சென்றுகொண்டிருந்தபோது வீதியில் மயங்கி விழுந்ததாக தெரிவிக்கப்பட்டது.

அவரை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இம் மரணம் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## லிட்ரோ...

தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் சமையல் எரிவாயு விலை அதிகரிப்பினை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3529
சீட்டிழுப்பு திகதி 03.11.2023
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 14 64 69 77
K
00722
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.11.03
சீட்டிழுப்பு இலக்கம் - 1317
N 25 26 59 63 N
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance 22886

லக்கி 7 Lucky 7
திகதி 03.11.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0113
L7 இலக்கம் 3 6
வெற்றி இலக்கினம் மகரம்
வெற்றி இலக்கங்கள் 9 0 3 5 9 6

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.03
சீட்டிழுப்பு இலக்கம் 596
வெற்றி இலக்கினம் கும்பம் 07 30 59 61 கும்பம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 03/11/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1635
C 11 08 52 61 62
Double Chance 30041

மஹஜன சம்பத
திகதி 2023/11/03
சீட்டிழுப்பு இலக்கம் 5287
G 4 3 5 9 2 5
தேசிய லொத்தர் சபை

## சீனத் தூதுக்...

ளது.

தமிழர்களின் பூர்வீகத் தாயகமான வடக்கு - கிழக்கு பகுதிகளில் சீனா வலிந்து ஆதிக்கம் செலுத்த முனைவது தமிழர்களின் வாழ்வாதாரத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாகும் என்று கடற்றொழிலாளர் சங்கங்கள் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டி வருவதுடன், எதிர்வரும் திங்கட்கிழமை சீனத் தூதுவர் தலைமையிலான குழுவினர் வருகையின் போது தமது எதிர்ப்பை வெளிப்படுத்த ஆயத்தங்கள் செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## நிர்மலா...

கிழமை நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு வருகை தந்து வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன்போது, அங்கு கூடியிருந்தவர்களிடம் நல்லூர் கந்தசுவாமி கோயில் பூசகரின் பெயர் என்ன என்று கேட்க, அங்கிருந்தவர்கள் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இறைபணி ஆற்றும் விஸ்வ பிரசன்னா சிவாச்சாரியாரை பற்றி கூறியுள்ளனர்.

அதற்கு அவர், "விஸ்வ பிரசன்னா சிவாச்சாரியார் உலகளவில் தற்போது ஹீரோ" என தெரிவித்ததோடு, நல்லூர் ஆலய மஹோற்சவத்தின்போது சிவாச்சாரியார் கட்டியம் கூறுவதையும் புகழ்ந்து பாராட்டினார்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் 25 நாள் மஹோற்சவத்தின்போது நடைபெறும் ஒருமுகத் திருவிழா - வேட்டை திருவிழாவில் விஸ்வ பிரசன்னா சிவாச்சாரியார் கட்டியப் பொல் பிடித்தபடி உரத்த குரலில் சொன்ன "ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீமான் மகா ராஜாதிராஜ ராஜ கம்பீர ராஜ மார்த்தாண்ட....." என தொடங்கும் கட்டியம் சமூக வலைத்தளங்களில் மிகப்பெரிய அளவில் வைரலாகி, இலங்கையில் மட்டுமன்றி கடல் கடந்து இந்தியா உள்ளிட்ட பல நாடுகளிலும் ஒலிக்கின்றமை இலங்கை மண்ணுக்கே உரிய பெருமை என பலரும் கருத்து தெரிவிக்கின்றனர். (ம-7,33)

## வடக்கிலுள்ள...

சனிக்கிழமை காலை 8 மணி வரை முன்னெடுக்கப்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை முன்பாக நேற்று காலை ஒன்றுகூடிய வைத்தியர்கள் கவனயீர்ப்பொன்றை முன்னெடுத்தனர்.

திறமையற்ற சுகாதார நிர்வாகிகளே வைத்தியர்களின் தொழில் உரிமைகளில் கை வைக்காதே!, முறையற்ற வரி சம்பள வெட்டு வைத்தியர்களை துரத்தாதே, அடிப்படை மருந்து உபகரணங்களை உறுதிப்படுத்து போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை வைத்தியர்கள் தாங்கியிருந்தனர்.

பல மாதங்களாக வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறி இருப்பதையும், அது தொடர்பாக ஏற்படக் கூடிய பிரச்சினைகளையும், அதை தடுப்பதற்குரிய வழிவகைகளைப் பற்றியும் ஆட்சியாளர்களுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், மக்களுக்கும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

இருப்பினும் இதுவரை எந்தவிதமான சாதகமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் உரிய தரப்பினால் மேற்கொள்ளப்படாத நிலையில் நாம் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தெரிவித்தனர். (ம-7,33)

## ஐஸ் போதைக்கு...

வன், போதைப்பொருளான ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையானவன் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரை வீட்டில் பெற்றோர்கள் பாதுகாப்பாக வைத்திருந்த நிலையில் வீட்டில் இருந்த மாணவன் ஐஸ் போதைப்பொருளினை உட்கொண்டு தூக்கில் தொங்கிய நிலையில் உயிரிழந்துள்ளான்.

உயிரிழந்தவரின் சடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டுவந்தபோது பிரேத பரிசோதனைகளில் குறித்த மாணவன் ஐஸ் போதைப்பொருள் பாவித்துள்ளமை தெரியவந்துள்ளது.

குறித்த மாணவன் கடந்த இரண்டு ஆண்டுகளாக பாடசாலை செல்லவில்லை என்றும் இது தொடர்பில் பாடசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளமையும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-7)

## தமிழ் மக்களுக்கு...

கிழக்குக்கு விஜயம் மேற்கொண்ட நிலையில் இரா. சம்பந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் வாழும் தமிழ் மக்களின் நலன்களில் இந்திய மத்திய அரசு முழுமையான அக்கறை செலுத்தியுள்ளது. உதவிகளையும் தொடர்ந்து வழங்கி வருகின்றது.

இதனை நாம் வரவேற்கின்றோம். அதேபோல், இலங்கையில் தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு விரைந்து கிடைக்க நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசு, இலங்கை அரசுக்குக் கடும் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

"அரசியல் தீர்வு விவகாரத்தில் ராஜபக்ஷ அரசு போல்ரணில் அரசும் வாக்குறுதிகளை மாத்திரம் வழங்குகின்றது.

ஆனால், செயல் வடிவில் எந்த முன்னேற்றமும் இல்லை. இந்த விவகாரத்தில் இந்திய மத்திய அரசு அதீத கவனம் செலுத்த வேண்டும். தமிழர்களின் கோரிக்கைகள் என்ன, அவர்கள் விரும்பும் தீர்வு என்ன ஆகிய விடயங்களை இந்தியாவின் மோடி அரசிடம் நாம் ஏற்கெனவே எடுத்துரைத்து விட்டோம். எனவே, இந்த விடயங்கள் தொடர்பில் மோடி அரசு, இலங்கை அரசுக்குக் கடும் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்" என்றார். (ம-7)

# டென்மார்க்கில் தீ விபத்து

## யாழைச் சேர்ந்தவர் மரணம்

டென்மார்க் நாட்டில் இடம் பெற்ற தீ விபத்து சம்பவத்தில் படுகாயம் அடைந்த யாழைச் சேர்ந்த இளம்குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

செம்பியன்பற்று தெற்கைச் சேர்ந்த ஆறுமுகசாமி காண்டீபன் என்ற இளம் குடும்பஸ்தரே உயரிழந்தவராவார்.

மேற்படி குடும்பஸ்தர் டென்மார்க் நாட்டில் குடும்பத்துடன் வசித்து வந்ததாகவும் சில தினங்களுக்கு முன்னர் எரிவாயு தீப்பற்றி படுகாயம் அடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ம-7,60)

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 2261 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.11.03 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 11 29 61 62 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,254,364/-
DLB அபிவிருத்தி லொத்தர் சபை

சனிதா Shanida
திகதி 2023.11.03 வெற்றி வாரம் 4422 வர்ணம் செம்மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 14 18 46 68 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,713,580.00
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி SASIRI
வெற்றி வாரம் 397
சீட்டிழுப்பு திகதி 2023.11.03
பச்சை
வெற்றி இலக்கங்கள் 13 23 39
08
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,127,960/-


ராசி
சீட்டிழுப்பு வாரம் 3973 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.11.03 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 19 42 48 58 மேஷம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,409,064/-

ஜய ஸ்ரீ
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 33 08 31 38 60
1437
2023.11.03
வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 460,462,244.20
DLB DEVELOPMENT LOTTERIES
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2087
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,506,544/-
சீட்டிழுப்பு திகதி : 2023.11.03
வெற்றி இலக்கங்கள் 11 20 32 36 V

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடேஸ்வர அன்னையின் வாழ்த்துக்கள்
## சேவை நலன் பாராட்டு



கல்விச் சேவையில் ஆசிரியராக அதிபராக 35 வருடங்கள் நிறைவு செய்து இன்று மணிவிழாக் காணும் எமது மதிப்பிற்குரிய

**திரு.கு.விமலன்** (அதிபர் – யா/நடேஸ்வரக் கல்லூரி)
SLPS-I PGDEM MEd BED

அவர்கள் ஓய்வுக் காலத்தில் சகல வளங்களும் பெற்று நீடூழி காலம் வாழ அன்னை புவனேஸ்வரி அம்பாளின் பாதார விந்தங்களைப் பணிந்து வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

ஆசிரியர்
யா/மாரீசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாலயம்
17.08.1988-19.01.1992
யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை
20.1.1992-31.12.1993
யா/சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம்
01.01.1994-12.05.1996
கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்
13.05.1996-29.01.1997
மு/பாலிநகர் ம.வி
30.01.1997-17.02.1999
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
18.02.1999-15.06.2010
அதிபர்
யா/ஆனைக்கோட்டை அ.மி.த.க பாடசாலை
16.06.2010-22.09.2010
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
23.09.2010-11.04.2017
யா/நடேஸ்வரக் கல்லூரி
12.04.2017-03.11.2023

Best Wishes!

(17633)

வாழ்த்துவோர்: **பாடசாலைச் சமூகம், யா/நடேஸ்வரக் கல்லூரி**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி
**சசிரேகா சுயதீப்**
(SLTS (2 I) விஞ்ஞானம்)

இன்று தேசிய கல்வியியற் கல்லூரியில் **அதிபர் தரம் 3** நியமனத்தைப் பெறும் எமது பாடசாலை ஆசிரியை திருமதி **சசிரேகா சுயதீப்** அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு அவர்களது சேவை கல்விப் புலத்துக்கு சிறந்த விருட்சமாக அமைய எல்லாம் வல்ல இறை ஆசியை வேண்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes!

**அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்**
**யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி.** (17654)


## VILLAGE HOTEL
பஸ் சேவை
**JAFFNA EXPRESS**
AIRPORT PICK UP DROP SERVICE



வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/=
(17484)
T.P: 077 544 8503

## அமெரிக்க லொத்தர் விசா
★ இன்னும் 3 நாட்கள் மட்டுமே
★ பதிவுகளை மேற்கொள்ளுங்கள்
★ அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna.
(17621)
077 755 4528

அமெரிக்க லொத்தர் விசா
நாளையுடன் பதிவுகள் நிறைவடைகின்றன
இறுதி சந்தர்ப்பம் - தவறவிடாதீர்கள்



LOADING
0768226244
55000 இலவச விசாக்கள்
நீங்களும் அமெரிக்காவில்...
V2 Travels
V2 TRAVELS

## VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✔ ONLINE APPLICATIONS
✔ VISA APPOINTMENTS
✔ PASSPORT APPLICATION
✔ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Visa Extension
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
(C-7554)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777


# மரண அறிவித்தல்

## கந்தையா சதானந்தன் (வவா)



| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 14.01.1957 | 02.11.2023 |

இணுவில் மேற்கு, வட்டுவினியைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு, மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சதானந்தன் அவர்கள் 02.11.2023 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) - கனகம்மா தம்பதிகளின் பாசமிகு புதல்வனும் காலஞ்சென்ற பத்மாவதியின் அருமைப் பெறாமகனும் காலஞ்சென்றவர்களான சோதிப்பெருமாள் (J.P, ஓய்வுபெற்ற அதிபர்) - சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும் மீனலோசனியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கருணானந்தன் மற்றும் ஆனந்தபாஸ்கரன் (ஆனந்தன் - கனடா), ஆனந்தகேதீஸ்வரன் (ஈசன்), வித்தியானந்தநங்கை (சுவிஸ்), சத்தியானந்தநங்கை (பிரான்ஸ்), சத்தியானந்தன் (அப்பன்) ஆகியோரின் அருமைச் சகோதரனும் யாழினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச வைத்தியசாலை, அடம்பன்), சர்மினி (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராகுலன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வலயக்கல்வி அலுவலகம், மடு) ஆகியோரின் அன்பு மாமனாரும் விரோஷின், ஷாருசி, ஆகியோரின் தாத்தாப்பாவும் யோகேந்திரன் (சுவிஸ்), ஜெயக்குமாரன் (பிரான்ஸ்), ஸ்ரீஸ்கந்தராஜா (லண்டன்), சந்திரலோசனி, விக்கினேஸ்வரி, பாமினி (கனடா), சிவனேஸ்வரி (ஓய்வுபெற்ற போதனாசிரியர்), சகுந்தலாதேவி ஆகியோரின் மைத்துனரும் சுகந்தமலர் (லண்டன்), தபானந்தன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் சகலனும் சோதிலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) தம்பதியின் சம்பந்தியும் சசிகரன் - ஜீத்தா, றஜீவ்கரன் - திவானா, தனுஷியா - ஹரிஹஜன் ஆகியோரின் சித்தப்பாவும் சுகாசினி, ரூசிகா - சுரேஸ், துளஷிகா - சிவசஜிதரன் ஆகியோரின் பெரிய தந்தையும் இந்துஜா - சுமன், சோபிதா - அஜந்தன், ஜெனித்தா - நிஷாந், சரபன், சரசவி, சாரகி ஆகியோரின் மாமனும் புயல், முகில், றக்ஷா, தீரன், ஹருணியா, ஹர்ஷியா, ஹரிசுபன், இஷ்ணு, அர்ச்சுனா, ஜெஜெஸ்னா, தியானா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.30 மணிக்கு காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"சரஸ்வதி மஹால்"
மஞ்சத்தடி தெற்கு, இணுவில். (17656)

தகவல் -
குடும்பத்தினர்


## கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில் கோழிகள் மலிவாக பெற்றுக்கொள்ள முடியும்

- 24 மணிநேர சேவை (இரவு, பகல்)
- சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தரப்படும்.
- புறோயிலர், பேரன்ஸ், கல்பேட்ஸ், ஊர்க்கோழி, சேவல், விறாத்துக்குஞ்சு
- இவை அனைத்தும் 33 வருடகால பூர்த்தியை முன்னிட்டு வியாபாரிகளுக்கும், ஹொட்டல் தேவைகளுக்கும் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படுகின்றன.
- மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு யாழ் மாவட்டம் முழுவதும் விநியோகம் இலவசம்



உரிமையாளர் : கரன்

## நியூ சிற்றி பாம்
## நியூ சிற்றி கோழிக்கடை
இல.8, மீன் சந்தை முன்பாக குருநகர், யாழ்ப்பாணம்.
தொடர்பு : 076 057 0354
(17659)

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
| --- | --- | --- |
| 1 Kg வெள்ளை சீனி | - 275/= | (max2Kg) |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 430/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 293/= | |
| 1 Kg கோதுமை மா | - 179/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 187/= | |
| 1 Kg றவை | - 288/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 170/= | |
| 1 Kg அரிசி மா | - 189/= | |
| 1 Kg மல்லி | - 370/= | |
| 400g அங்கர் பால்மா | - 1040/= | ~~(1080/=)~~ |
| 70g பேபி சோப் | - 108/= | ~~(145/=)~~ |
| 400g நெஸ்டமோல்ட் | - 800/= | ~~(830/=)~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 360/= | ~~(430/=)~~ |

1040/=



~~1080/-~~

(17660)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
Happy Supermarket
0777 8080 30


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறை...) லிமிடெட் ஸ்தா... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org